
APPOLO STUDY CENTRE

# நடப்பு நிகழ்வுகள் - மார்ச் 1 – 31, 2023



| வ.எண். | தலைப்புகள் | பக்க எண். |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு | 3 |
| 2 | மாநிலங்கள் | 8 |
| 3 | தேசிய செய்திகள் | 9 |
| 4 | சர்வதேச செய்திகள் | 11 |
| 5 | திட்டங்கள் | 11 |
| 6 | இந்தியா மற்றும் இதர நாடுகள் | 12 |
| 7 | மாநாடுகளும் உச்சி மாநாடுகளும் | 14 |
| 8 | பாதுகாப்பு | 16 |
| 9 | நியமனங்கள் | 20 |
| 10 | விருதுகள் | 21 |
| 11 | பொருளாதாரம் | 24 |
| 12 | புகழ்பெற்ற நபர்கள் | 25 |
| 14 | அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச் சூழல் | 27 |
| 15 | விளையாட்டு | 30 |
| 16 | அறிக்கைகள் | 31 |
| 17 | தரவரிசைப் பட்டியல் | 33 |
| 18 | முக்கிய தினங்கள் | 35 |
| 19 | நடப்பு நிகழ்வுகள் - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய அசல் கேள்விகள் மற்றும் பதில்கள் - தேர்வுகள் ஜனவரி மற்றும் பிப்ரவரி 2023 மாதங்களில் நடத்தப்பட்டன. | 39 |


APOLLO STUDY CENTRE

# தமிழ்நாடு

- **காலநிலை மாற்றத் தணிப்பு மற்றும் பசுமை மாற்றம்**
  - ✓ இந்திய தொழில்நுட்ப நிறுவனம், சென்னை – மார்ச் 01 அன்று அடுத்த தலைமுறை எரிபொருள்கள் மற்றும் ஆற்றல் அமைப்புகளின் வளர்ச்சியை உள்ளடக்கிய காலநிலை மாற்றத் தணிப்பு மற்றும் பசுமை மாற்றத்திற்கான ஆராய்ச்சிக்காக டென்மார்க்குடன் கூட்டு சேர்ந்துள்ளது.
  - ✓ இந்தத் திட்டத்திற்கு டென்மார்க் புதுமை நிதியம் (Innovation Fund Denmark) மற்றும் இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை இணைந்து நிதியளிக்கும்.
  - ✓ இந்தக் கூட்டாண்மையின்கீழ், மாநிலத்தின் முதல் கடலோர காற்றாலையை நிறுவுவதற்கு தமிழ்நாட்டுடன் இணைந்து டென்மார்க் செயல்படுகிறது.

- **விரிவான நகர்ப்புற குளிரூட்டும் திட்டம் (Comprehensive Urban Cooling Programme)**
  - ✓ தமிழ்நாடு அரசு – காலநிலை மாற்றம் குறித்த தமிழ்நாடு மாநில செயல்திட்டத்தின்கீழ் ஒரு விரிவான நகர்ப்புற குளிரூட்டும் திட்டத்தை உருவாக்க ஐக்கிய நாடுகளின் சுற்றுச் சூழல் திட்டத்துடன் (United Nations Environment Programme) புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
  - ✓ இந்த ஐக்கிய நாடுகள் சுற்றுச் சூழல் திட்டமானது, சுற்றுச் சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையுடன் இணைந்து செயல்படும்.
  - ✓ ஐக்கிய நாடுகள் சுற்றுச் சூழல் திட்டமானது, தேசிய நகர்ப்புற விவகாரங்கள் நிறுவனம் மற்றும் டென்மார்க்கின் வெளியுறவு அமைச்சகத்துடன் இணைந்து, இந்திய நகரங்களில் நிலையான குளிர்ச்சி மற்றும் வெப்பத்தை எதிர்க்கும் உத்திகளை செயல்படுத்துவதற்கு தேசிய குளிரூட்டும் திட்டத்தைச் செயல்படுத்துகிறது.

- **காலநிலை ஸ்மார்ட் கிராமங்கள்**
  - ✓ தமிழகத்தில் உள்ள 10 கிராமங்களை ‘காலநிலை ஸ்மார்ட் கிராமங்களாக’ மாற்றுவதற்கான முன்னோடித் திட்டத்தை முதலமைச்சர் மார்ச் 3ஆம் தேதி தொடங்கி வைத்தார்.
  - ✓ சுற்றுலாத் தலங்களுக்கு அருகில் உள்ள பத்து கிராமங்கள், உலக வள நிறுவனத்துடன் (World Resources Institute) ஒருங்கிணைந்து பருவ நிலையை எதிர்க்கும் கிராமங்களாக மாற்றுவதற்காக சுற்றுச் சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத் துறையால் அடையாளம் காணப்பட்டுள்ளன.
  - ✓ இந்த முன் முயற்சியானது மற்ற முயற்சிகளுடன் கூடவே சூரிய ஒளி போன்ற புதுப்பிக்கத்தக்க ஆற்றலை ஊக்குவிப்பதிலும், கழிவுநீரை சுத்திகரித்து மீண்டும் பயன்படுத்துவதிலும் கவனம் செலுத்துகிறது.

- **கீழடி அருங்காட்சியகம்**
  - ✓ சிவகங்கை மாவட்டத்தில் ரூ.18 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட அதிநவீன கீழடி அருங்காட்சியகத்தை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் மார்ச் 5ஆம் தேதி திறந்து வைத்தார்.
  - ✓ 31,000 ச.அடியில் ஆறு தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள இந்த அருங்காட்சியகத்தில் கீழடி, அகரம் மற்றும் மணலூர் அகழ்வாராய்ச்சித் தளங்களில் இருந்து தோண்டியெடுக்கப்பட்ட சுமார் 10,000 கலைப்பொருட்கள் காட்சிப்படுத்தப்படும்.
  - ✓ கீழடி என்பது பழைய மதுரை மாவட்டத்தில் வைகை ஆற்றின் கரையில் அமைந்துள்ள கிராமம் ஆகும்.

 044-24339436, 044-42867555, 9840226187

- **இலவச பயிற்சித் திட்டம்**
  - ✓ தமிழக கல்லூரி மாணவர்கள் பல்வேறு அரசுப் பணிகளுக்கான ஆட்சேர்ப்புத் தேர்வுகளுக்குத் தயாராகும் வகையில் 'நான் முதல்வன்' திட்டத்தின்கீழ் இலவசப் பயிற்சித் திட்டத்தை மார்ச் 7 ஆம் தேதி இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.
  - ✓ இந்தத் திட்டத்தின்கீழ், மாணவர்கள் ஐஐடி, என்ஐடி மற்றும் தேசிய பல்கலைக் கழகங்களில் சேருவதற்கு ஐஐடி, ஜே.இ.இ, கிளாட் (CLAT) மற்றும் பிற நுழைவுத் தேர்வுகளுக்கும் பயிற்சி அளிக்கப்படும்.
  - ✓ இந்நிகழ்ச்சியில், அடுத்த கல்வியாண்டு முதல் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கும் நான் முதல்வன் திட்டம் விரிவுபடுத்தப்படும் என்று உயர்கல்வித் துறை அமைச்சர் பொன்முடி கூறினார்.

- **தாலிக்குத் தங்கம் திட்டம்**
  - ✓ இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை – அதன் பதிப்பான 'தாலிக்குத் தங்கம்' என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
  - ✓ இந்தப் புதியத் திட்டத்தின்கீழ், ஏழை தம்பதிகளுக்கு, நான்கு கிராம் தங்கத் தாலி மற்றும் திருமண உதவி ஆகியவை மொத்தம் 50,000 ரூபாய் மதிப்பில் ஆகியவை வழங்கப்படும்.
  - ✓ திருமண உதவியாக தாலி உள்ளிட்ட 13 பொருட்கள் வழங்கப்படும் என கடந்த பிப்ரவரி 16ஆம் தேதி இத்துறை ஆணை வழங்கியுள்ளது.

- **எம்-சாண்ட் /நொறுக்கப்பட்ட மணல் கொள்கை**
  - ✓ மார்ச் 9 அன்று, மாநில அரசு – புதிய எம்-சாண்ட்/ நொறுக்கப்பட்ட மணல் கொள்கையை வெளியிட்டது. எம்-சாண்ட்/ நொறுக்கப்பட்ட மணலின் பயன்பாட்டை மேம்படுத்துதல், அவற்றின் குவாரிகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் நதி சுற்றுச் சூழல் அமைப்புகளுக்கு சேதம் ஏற்படுவதைத் தடுக்கும் நோக்கத்தில் இந்தக் கொள்கை வெளியிடப்பட்டுள்ளது.
  - ✓ மாநிலத்தில் உள்ள எம்-சாண்ட்/ நொறுக்கப்பட்ட மணல் உற்பத்தி அலகுகள், இவை தொடர்புடைய சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்கச் செயல்படுவதை இக்கொள்கை உறுதிசெய்கிறது.

- **புன்னகை – பள்ளிக் குழந்தைகளுக்கான பல் பராமரிப்புத் திட்டம்**
  - ✓ மாநில சுகாதாரத் துறை – நந்தனத்தில் உள்ள அரசுப் பள்ளியில் மாணவர்களுக்கான 'புன்னகை' (smile) என்ற வாய்வழி சுகாதாரப் பரிசோதனைத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
  - ✓ பள்ளிக் குழந்தைகளை பரிசோதிக்கவும், வாய் நோய்கள், பல்சொத்தை, ஈறு பிரச்சினைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், தீர்வு காணவும் பயன்படும் வகையில், பள்ளிக் கல்வித் துறையுடன் இணைந்து, 'புன்னகை' என்ற திட்டத்தை, சுகாதாரத் துறை தொடங்கியுள்ளது.

- **அனைத்து மகளிர் உற்பத்திப் பிரிவு (All Women Production Line)**
  - ✓ அசோக் லேலாண்ட் நிறுவனம் அதன் தமிழ்நாடு தொழிற்சாலையில், அனைத்தும் பெண்களைக் கொண்ட உற்பத்திப் பிரிவை தொடங்கியுள்ளது.
  - ✓ இந்திய வணிக வாகன உற்பத்தியாளரான அசோக் லேலாண்ட், தமிழ்நாட்டில் உள்ள அதன் ஓசூர் ஆலையில் 100 விழுக்காடு பெண் ஊழியர்களைக் கொண்ட, 'அனைத்து மகளிர் தயாரிப்புப் பிரிவை' அறிமுகப்படுத்தியுள்ளது.

- ✓ பெண்களுக்கு அதிகாரமளிப்பதை ஊக்குவிப்பதற்காகவும், உற்பத்தித் துறையில் அவர்கள் பங்குபெறுவதை ஊக்குவிப்பதற்காகவும், முற்றிலும் பெண்களைக் கொண்ட உற்பத்திப் பிரிவை தோற்றுவித்துள்ளது.

## ➢ தமிழ்நாடு இயற்கை வேளாண்மைக் கொள்கை 2023

- ✓ மாநிலத்தில் இரசாயணமற்ற இயற்கை விவசாயத்தை ஆதரிக்கவும், மக்களுக்கு பாதுகாப்பான உணவை வழங்க வேண்டும் என்பதற்காகவும், மாநில அரசு, தமிழ்நாடு இயற்கை வேளாண்மைக் கொள்கை 2023ஐ மார்ச் 14 அன்று வெளியிட்டது.
- ✓ கரிம சான்றளிப்பு முறையை வலுப்படுத்துதல், பாரம்பரிய விதைகளைப் பரப்புதல் மற்றும் தொகுப்பு அடிப்படையிலான உலர்நில சாகுபடியை ஊக்குவித்தல் ஆகியவற்றை இந்தக் கொள்கை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ➢ 2023ஆம் ஆண்டுக்கான புக்கர் பரிசு நீண்ட பட்டியல்

- ✓ தமிழ் எழுத்தாளர் பெருமாள் முருகன் - 2023ஆம் ஆண்டிற்கான சர்வதேச புக்கர் பரிசுக்கான நீண்ட பட்டியலில் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- ✓ அனிருத்தன் வாசுதேவன் தமிழில் இருந்து மொழிபெயர்த்த 2016ஆம் ஆண்டு புத்தகமான ‘Pyre’ மூலம் முருகன் மதிப்புமிக்க இந்தப் பட்டியலில் இடம் பிடித்துள்ளார்.
- ✓ இந்நூல் அவரின் மூல தமிழ்ப் படைப்பான ‘பூக்குழி’யின் மொழிபெயர்ப்பாகும்.
- ✓ கௌரவக் கொலையின் பின்னணியில் எழுதப்பட்டுள்ள ‘பையர்’ என்ற இந்த பயங்கரக் கதையானது, குடும்பத்தை விட்டு ஓடிப் போகும் சாதி மறுப்பு ஜோடியின் கதையை சொல்கிறது.

## ➢ லேக்பிரண்ட் ரீகனெக்ட் போட்டி (Lakefront Reconnect Competition)

- ✓ சென்னை பெருநகர வளர்ச்சி ஆணையம் - நாட்டிலுள்ள சிறந்த கட்டிடக்கலை நிறுவனங்களின் வடிவமைப்புகளை வரவேற்கும் விதமாக ‘லேக்பிரண்ட் ரீகனெக்ட்’ போட்டியைத் தொடங்கியுள்ளது.
- ✓ சென்னையில் உள்ள 10 ஏரிக்கரைப் பகுதிகளை ரூ.100 கோடி செலவில் மேம்படுத்தும் திட்டத்திற்கான இந்தப் போட்டியை சிஎம்டிஏ மற்றும் நீர்வளத்துறை இணைந்து நடத்துகின்றன.
- ✓ மக்களுக்கும் தண்ணீருக்கும் இடையேயான தொடர்பை மீண்டும் நிலைநிறுத்துவதற்காக இந்த ஏரிகளை நிரப்புவதற்கும் பாதுகாப்பதற்குமான மாதிரிகளின் வடிவமைப்புகளை இந்தப் போட்டி முக்கியமாகக் கவனிக்கும்.

## ➢ தமிழ்நாடு நகர எரிவாயு விநியோகக் கொள்கை 2023 (Tamil Nadu City Gas Distribution Policy 2023)

- ✓ இயற்கை எரிவாயுவை பசுமை மற்றும் சுத்தமான எரிபொருளாக ஏற்றுக் கொள்வதை மாநில அரசு ஊக்குவிக்க வேண்டும் என்பதை இந்த நகர எரிவாயு விநியோகக் கொள்கை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ✓ அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் மாநிலத்தில் எரிவாயு வலையமைப்பை விரிவுபடுத்துவதற்கும், மாநிலம் முழுவதும் வீடுகளுக்கு குழாய் மூலம் இயற்கை எரிவாயு விநியோகத்தை விரைவுபடுத்துவதற்கும் ஒரு வரைபடத்தை இந்தக் கொள்கை அமைத்துத் தருகிறது.
- ✓ அனைத்து தொலைத் தொடர்பு ஆபரேட்டர்களும் இயற்கை எரிவாயு அடிப்படையிலான ஜெனரேட்டர்களின் பயன்பாட்டை ஏற்றுக் கொள்வதை ஊக்குவிப்பதை இந்தக் கொள்கை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- **தமிழ்நாடு தளவாடக் கொள்கை (Tamil Nadu Logistics Policy) மற்றும் ஒருங்கிணைந்த தளவாடத் திட்டம் (Integrated Logistics Plan) 2023**

✓ தமிழ்நாடு தளவாடக் கொள்கை மற்றும் ஒருங்கிணைந்த தளவாடத் திட்டம் 2023ஐ முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டார்.

✓ தற்போதுள்ள தொழில்துறை தொகுப்புகள், விவசாய ஒருங்கிணைப்பு அல்லது செயலாக்க மையங்கள், மீன்வளம் - கடல் மற்றும் கால்நடை பராமரிப்பு தொகுப்புகள் ஆகியவற்றில் உள்ள இணைப்பு இடைவெளிகளை மதிப்பிடவும், சாலை இணைப்பு மேம்பாட்டிற்கு முன்னுரிமை அளிப்பதற்காகவும் இது முன்மொழியப்பட்டது.

- **எத்தனால் கலப்புக் கொள்கை 2023**

✓ மாநிலத்தை பசுமைப் பொருளாதாரம் மற்றும் செலவு குறைந்த, மாற்று பசுமை எரிபொருளுக்கான முதலீட்டு மையமாக மேம்படுத்துவதை இந்தக் கொள்கை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ மாநிலத்தில் வெல்லப்பாகு மற்றும் தானிய அடிப்படையிலான எத்தனால் உற்பத்தியில் ரூ.5000 கோடி மதிப்பிலான முதலீடுகளை ஈர்ப்பதும், மதிப்பிடப்பட்ட 130 கோடி லிட்டர் எத்தனால் கலப்புத் தேவையைப் பூர்த்தி செய்வதில் தன்னிறைவு அடைவதும் இந்தக் கொள்கையின் நோக்கமாகும்.

- **தந்தை பெரியார் வனவிலங்கு சரணாலயம்**

✓ தந்தை பெரியார் வனவிலங்கு சரணாலயம் அமைப்பது குறித்த அறிவிப்பை தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. இது நமது மாநிலத்தின் 18வது வனவிலங்கு சரணாலயம் ஆகும்.

✓ ஈரோடு மாவட்டத்தில் உள்ள அந்தியூர் மற்றும் கோபிசெட்டிபாளையம் வட்டங்களில் 80,567 ஹெக்டேர் பரப்பளவில் பரவியுள்ள இந்த சரணாலயத்தில் அந்தியூர், பர்கூர், தட்டக்கரை, சென்னம்பட்டி ஆகிய காப்புக்காடு பகுதிகள் அடங்கும். இதற்கான அறிவிப்பு சமீபத்தில் மாநில அரசின் வரவு செலவுத் திட்டத்தில் வெளியிடப்பட்டது.

- **தமிழ்நாடு ஆன்லைன் சூதாட்டத்தடை மற்றும் ஆன்லைன் விளையாட்டுகளை ஒழுங்குபடுத்தும் மசோதா, 2022**

✓ மார்ச் 2023 அன்று, தமிழ்நாடு சட்டமன்றம் - 'தமிழ்நாடு ஆன்லைன் சூதாட்டத் தடை மற்றும் ஆன்லைன் விளையாட்டுகளை ஒழுங்குபடுத்தும் மசோதா, 2022' ஐ மீண்டும் நிறைவேற்றியது.

✓ இந்த மசோதா ஆன்லைன் சூதாட்டத்தைத் தடை செய்ய முயல்கிறது மற்றும் இது ஆளுநரின் ஒப்புதலுக்காக மீண்டும் அனுப்பப்படும்.

✓ இந்த மசோதாவை மீண்டும் தாக்கல் செய்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலின். தனது அதிகார வரம்பிற்குள் வசிக்கும் மக்களை 'நெறிப்படுத்தவும், ஒழுங்குபடுத்தவும், பாதுகாக்கவும்' மாநில அரசுக்கு உரிமை உள்ளது என்றார்.

- **பிரதமரின் மெகா ஒருங்கிணைந்த ஜவுளி மண்டலம் மற்றும் ஆடைகள் (PM Mega Integrated Textile Regions and Apparel - PM MITRA)**

✓ இந்தியாவின் முதலாவது, பிரதமரின் மெகா ஒருங்கிணைந்த ஜவுளி மண்டலம் மற்றும் ஆடைகள் பூங்கா – தமிழ்நாட்டின் விருதுநகர் மாவட்டத்தில் உள்ள ஈ. குமாரலிங்கபுரம் கிராமத்தில் நிறுவப்பட உள்ளது.

✓ இது தொடர்பாக கடந்த மார்ச் 22ஆம் தேதி அன்று, ஒன்றிய மாநில அரசுகளுக்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

- ✓ இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் மற்றும் ஒன்றிய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஸ் கோயல் ஆகியோர் இணைந்து பிஎம் மித்ரா பூங்காவைத் தொடங்கி வைத்தனர்.

## ➢ பேரிடர் மேலாண்மைத் திட்டம் மற்றும் மாநில பேரிடர் மேலாண்மை கொள்கை 2023

- ✓ மார்ச் 24 அன்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் - சென்னை தலைமைச் செயலகத்தில், மாநில பேரிடர் மேலாண்மைத் திட்டம் மற்றும் மாநில பேரிடர் மேலாண்மைக்கொள்கை 2023ஐ வெளியிட்டார்.
- ✓ இந்தப் புதிய கொள்கையின் கீழ், மாநில அரசு பேரிடர் மேலாண்மையில் தடுப்பு, தயார்நிலை மற்றும் விரைவான பதிலளிப்பு என்ற புதிய கலாச்சாரத்தை பின்பற்றும்.
- ✓ இந்தக் கொள்கையானது, பல்வேறு பங்குதாரர்களின் பொறுப்புகளுடன், நன்கு வரையறுக்கப்பட்ட அதிகாரத்துடன் தெளிவான கட்டளைச் சங்கிலியை அமைக்கிறது. அத்துடன், திறமையான பயன்பாட்டை உறுதி செய்வதற்காக, கிடைக்கக் கூடிய வளங்களை ஒதுக்குகிறது.

## ➢ தமிழ்நாடு காசநோய் இறப்பில்லா திட்டம்

- ✓ காசநோயால் பாதிக்கப்பட்டவர்களின் இறப்பு விகிதத்தைக் குறைப்பதற்காக, தமிழ்நாடு அரசு பிற மாநிலங்களுக்கு முன்னோடியாகத் திகழ்கிறது.
- ✓ 30 மாவட்டங்களில் காசநோயைக் கண்டறிந்து 2500க்கும் மேற்பட்ட பொதுசுகாதார வசதிகளில் ஏப்ரல் 2022இல் தொடங்கிய இந்த தமிழ்நாடு காசநோய் இறப்பில்லா திட்டம் - ஆரம்ப கால காசநோய் இறப்புகளின் எண்ணிக்கையில் ஏற்கனவே குறிப்பிடத்தக்க குறைப்பை எட்டியுள்ளது.

## ➢ பெருநகர சென்னை மாநகராட்சி வரவு செலவுத் திட்டம்

- ✓ பெருநகர சென்னை மாநகராட்சியில் 2023-24ஆம் நிதியாண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை மேயர் ஆர். பிரியா தாக்கல் செய்தார்.
- ✓ இந்த வரவு செலவுத் திட்டம், கல்வி, போக்குவரத்து, திடக்கழிவு மேலாண்மை, மழைநீர் வடிகால் மற்றும் வார்டு மேம்பாடு ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.
- ✓ இந்த வரவு செலவுத் திட்டம் முந்தைய ஆண்டின் 780 கோடி வரவு செலவுத் திட்ட பற்றாக்குறையை 334.5 கோடி ரூபாயாகக் குறைத்துள்ளது.

## ➢ வைக்கம் சத்தியாகிரகம் - தமிழ்நாடு

- ✓ வைக்கம் சத்தியாகிரகத்தின் நூற்றாண்டு விழாவை நினைவுகூறும் வகையில் ஓராண்டு நிறைவு விழா கொண்டாடப்படும் என்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் மார்ச் 30ஆம் தேதி அறிவித்தார்.
- ✓ வைக்கம் சத்தியாக்கிரகம் என்பது தீண்டாமைக்கு எதிரான வரலாற்றுப் போராட்டமாகும். இதில் சமூக சீர்திருத்தவாதியும், திராவிடர் கழக நிறுவனருமான பெரியார் ஈ.வெ. ராமசாமி முக்கிய பங்கு வகித்து, போராட்டங்களை முன்னின்று நடத்தியதற்காக சிறையில் அடைக்கப்பட்டார்.

# மாநில செய்திகள்

➢ **சுகாதார உரிமை மசோதா 2022**

✓ மார்ச் 21 அன்று, ராஜஸ்தான் - சுகாதார உரிமை மசோதா 2022ஐ சட்டமன்றத்தில் நிறைவேற்றிய முதல் மாநிலம் ஆனது.

✓ இந்த மசோதாவின்படி, மாநில மக்கள் அரசு அல்லது குறிப்பிடப்பட்ட தனியார் மருத்துவமனைகளில் எந்த முன்பணமும் இன்றி அவசர சிகிச்சை பெறுவதற்கு உரிமை பெறுவார்கள். சிசிக்சைக் கட்டத்தை செலுத்த இயலாத நிலையில் நோயாளி இருந்தால், அந்தக் கட்டணத்தை மாநில அரசே திரும்பிச் செலுத்தும்.

✓ அனைத்து அரசு சுகாதார நிலையங்களிலும் இலவச வெளிநோயாளர் பிரிவு மற்றும் உள் நோயாளர் பிரிவு சேவைகளைப் பெறுவதற்கு மாநிலத்தின் ஒவ்வொரு குடியிருப்பாளருக்கும் இந்த மசோதா உரிமை அளிக்கிறது.

➢ **வைக்கம் சத்தியாக்கிரகம்**

✓ வைக்கம் சத்தியாக்கிரகத்தின் நூற்றாண்டு விழாவை தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் மற்றும் கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் - ஏப்ரல் 1ம் தேதி கோட்டயத்தில் கூட்டாகத் தொடங்கி வைத்தனர்.

✓ 603 நாட்கள் நீடிக்கும் இந்தக் கொண்டாட்டங்கள் ஏப்ரல் 1 ஆம் தேதி தொடங்கி நவம்பர் 23, 2025 அன்று முடிவடையும்.

✓ கேரள மாநிலத்தில் நவீனத்துவத்தை அறிவிப்பதில் வைக்கம் சத்தியாக்கிரகம் முக்கிய பங்காற்றியது.

# தேசிய செய்திகள்

➢ **8வது ரெய்சினா பேச்சுவார்த்தை**

✓ ரெய்சினா பேச்சுவார்த்தையின் 8வது பதிப்பு மார்ச் 2023இல் நடைபெற உள்ளது. வெளியுறவு அமைச்சகம் அப்சர்வர் ஆராய்ச்சி அறக்கட்டளை (Observer Research Foundation) உடன் இணைந்து இந்தப் பேச்சுவார்த்தையை நடத்துகிறது.

✓ புவிசார் மூலோபாயம் மற்றும் புவிசார் அரசியல் குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட உள்ளது.

✓ இந்த ரெய்சினா பேச்சுவார்த்தை 2023இன் மையக் கருத்து – ஆத்திரமூட்டல், நிச்சயமற்ற தன்மை, கொந்தமளிப்பு: புயலில் கலங்கரை விளக்கம் என்பதாகும்.

➢ **2023 மழையைச் சேகரிப்போம் பிரச்சாரம் (Catch the Rain 2023 Campaign)**

➢ '2023 மழையைச் சேகரிப்போம்' பிரச்சாரம் புதுதில்லியில் குடியரசுத் தலைவரால் அறிமுகப்படுத்தப்பட்டது. குடிநீர் ஆதாரங்களை நிலையாகப் பெறுவதே இந்த பிரச்சாரத்தின் மையக் கருத்து ஆகும்.

➢ இந்த விழாவில் உரையாற்றிய குடியரசுத் தலைவர், 'உலகின் நீர் ஆதாரங்களில் 4 விழுக்காடு மட்டுமே இந்தியாவில் இருப்பதால், நீர் மேலாண்மை மற்றும் பாதுகாப்பு இந்தியாவின் மிக முக்கியமான சவால்கள்' என்று குறிப்பிட்டார்.

➢ **உலகின் முதல் மூங்கில் தடையை இந்தியா நிறுவுகிறது**

✓ உலகின் முதல் 200 மீட்டர் நீளமுள்ள மூங்கில் விபத்து தடுப்பு அமைப்பு மஹாராஷ்டிரா மாநிலம் விதர்பபில், வானி – வரோரா நெடுஞ்சாலையில் நிறுவப்பட்டுள்ளது.

✓ இதற்கு 'பாகு பல்லி' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

✓ மூங்கில் தடையின் மறுசுழற்சி மதிப்பு 50 முதல் 70 விழுக்காடு ஆகும்.

✓ இந்தத் தடுப்புச் சுவர் தயாரிப்பில் பயன்படுத்தப்படும் மூங்கில் இனம் பாம்புசா பால்கோவா (Bambusa Balcoa) ஆகும்.

➢ **பணமோசடி தடுப்புச் சட்டம்**

✓ ஒன்றிய அரசு – கிரிப்டோகரன்சி வர்த்தகம், பாதுகாப்பு மற்றும் தொடர்புடைய நிதிச் சேவைகளை பணமோசடி தடுப்புச் சட்டத்தின்கீழ் கொண்டு வந்துள்ளது.

✓ இதற்கான அரசிதழ் அறிவிப்பை ஒன்றிய அரசின் நிதி அமைச்சகம், கடந்த மார்ச் 7ஆம் தேதி வெளியிட்டது.

✓ இனிமேல், கிரிப்டோ பரிமாற்றங்கள் மற்றும் மெய்நிகர் டிஜிட்டல் சொத்துக்களை கையாளும் இடைத்தரகர்கள் தங்கள் வாடிக்கையாளர்கள் மற்றும் தளத்தின் பயனர்களின் கேஒய்சி (KYC) விவரங்களைச் சேகரிக்க வேண்டும்.

➢ **சர்வதேச பெரிய பூனைக் கூட்டணி (International Big Cat Alliance)**

✓ இந்தியா – ஏழு பெரிய நாடுகளின் பாதுகாப்பு மற்றும் ஆதரவிற்காக அதன் தலைமையின்கீழ், ஒரு மெகா உலகளாவிய கூட்டணியான 'சர்வதேச பெரிய பூனைக் கூட்டணியைத் தொடங்க முன்மொழிந்துள்ளது.

✓ இந்தக் கூட்டணி, புலி, சிங்கம், சிறுத்தை, பனிச்சிறுத்தை, பூமா, ஜாகுவார் மற்றும் சிறுத்தை ஆகிய ஏழு பெரிய பூனைகளின் பாதுகாப்பை நோக்கி செயல்படும்.

- ✓ இந்த பெரிய பூனைகளின் இயற்கையான வாழ்விடங்கள் அமைந்துள்ள பகுதியின் வரம்பில் அமைந்துள்ள 97 நாடுகளுக்கும், பிற ஆர்வமுள்ள நாடுகள், சர்வதேச நிறுவனங்கள் போன்றவற்றிற்கும் இந்த அமைப்பில் சேர்வதற்கான வாய்ப்பு அளிக்கப்படும்.

## ➢ உலகின் மிக நீளமான இரயில்வே நடைமேடை

- ✓ பிரதமர் நரேந்திர மோடி 11 மார்ச் 2023 அன்று உலகின் மிக நீளமான இரயில்வே நடைமேடையை ஹுப்பள்ளி – தார்வார்டில் திறந்து வைத்தார்.
- ✓ இதன்மூலம், ஸ்ரீசித்தாருட சுவாமிஜி நிலையத்தில், உலகின் மிக நீளமான இரயில்வே நடைமேடையை கொண்டுள்ள நகரம் என்ற பெயரைப் பெற்று இந்த நகரம் கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.
- ✓ 1507 மீட்டர் நீளம் கொண்ட இந்த நடைமேடை சுமார் 20 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளது.

## ➢ பசுமை தேசிய நெடுஞ்சாலை வழித்தடங்கள் திட்டம்

- ✓ இந்தியாவில் நான்கு மாநிலங்களில் 781 கி.மீ பசுமை நெடுஞ்சாலைகளை அமைப்பதற்கான கடன் ஒப்பந்தத்தில் இந்தியாவும் உலக வங்கியும் சமீபத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- ✓ இந்தத் திட்டம் 4 இந்திய மாநிலங்களில் பசுமை தேசிய நெடுஞ்சாலை வழித்தடத் திட்டத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ✓ நெடுஞ்சாலைகள் பாதுகாப்பானவையாகவும், சுற்றுச் சூழலுக்கு இணக்கமாகவும் இருப்பதை மெய்ப்பித்துக் காட்டவதற்காக, பசுமை தேசிய நெடுஞ்சாலை வழித் தடங்கள் திட்டம், பசுமை தொழில்நுட்பங்கள் மற்றும் காலநிலை மீள்தன்மை ஆகியவற்றைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கும்.

## ➢ பிரதமரின் மித்ரா (Mega Integrated Textile Region and Apparel Parks – மெகா ஒருங்கிணைந்த ஜவுளி மண்டலம் மற்றும் ஆடை பூங்காக்கள்) திட்டம் PM MITRA (Mega Integrated Textile Region and Apparel Parks)

- ✓ தமிழ்நாடு, தெலுங்கானா, கர்நாடகா, மகாராஷ்டிரா, குஜராத், மத்தியப் பிரதேசம் மற்றும் உத்தரப் பிரதேசத்தில் பிரதமரின் மித்ரா (மெகா ஒருங்கிணைந்த ஜவுளிப் பகுதி மற்றும் ஆடை பூங்காக்கள்) ஏழு அமைக்கப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி மார்ச் 17 அன்று அறிவித்தார்.
- ✓ நூற்பு, நெசவு, பதப்படுத்துதல் அல்லது சாயமிடுதல் மற்றும் அச்சிடுதல் முதல் ஆடை உற்பத்தி வரை – ஒரே இடத்தில் ஒரு ஒருங்கிணைந்த ஜவுளி மதிப்பு சங்கிலியை உருவாக்குவதற்காக இந்தப் பூங்காக்கள் அமைக்கப்படுகின்றன.

 044-24339436, 044-42867555, 9840226187

# சர்வதேச செய்திகள்

- **சவுதி யோகா குழு**

✓ சவுதி அரேபியா – மனம் மற்றும் உடல் ஆரோக்கியத்திற்கான முக்கியத்துவம் காரணமாக யோகாவை அதன் பல்கலைக் கழகங்களில் அறிமுகப்படுத்த உள்ளது.

✓ பல்கலைக் கழகங்களில் யோகாவை சீராக அறிமுகப்படுத்துவதற்கு வசதியாக, சவுதி அரசு சவுதி யோகா குழுவை அமைத்துள்ளது.

✓ சவுதி அரசாங்கத்தின் 'தொலைநோக்குப் பார்வை 2030'ன்படி, ஆரோக்கியம் மற்றும் சுகாதாரத்திற்காக, யோகாவை பயிற்சி செய்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, பல்கலைக் கழகங்களில் யோகாவை அறிமுகப்படுத்துவதற்கு இந்தக் குழு கடுமையாக முயற்சி செய்து வருகிறது.

- **உயர் கடல்கள் ஒப்பந்தம் (High Seas Treaty)**

✓ ஐக்கிய நாடுகள் சபை – தேசிய எல்லைக்கு வெளியே அமைந்துள்ள உலகின் கடல் உடல்களைப் பாதுகாப்பதற்கான முதல் 'உயர் கடல்கள் ஒப்பந்தத்தில்' கையெழுத்திட்டது.

✓ உயர் கடல்கள் நாடுகளின் பிரத்தியேக பொருளாதார மண்டலங்களின் எல்லையில் தொடங்குகின்றன. இது கடற்கரையிலிருந்து 200 கடல் மைல்கள் (370 கிமீ) வரை நீண்டுள்ளது. இதன்மூலம் எந்த நாட்டின் அதிகார வரம்பிற்கும் உட்பட்டது.

✓ இந்த ஒப்பந்தம், கடல்வாழ் உயிரினங்களின் பாதுகாப்பை நிர்வகிப்பதற்கும், உயர் கடல்களில் கடல்சார் பாதுகாக்கப்பட்ட பகுதிகளை நிறுவுவதற்கும் ஒரு புதிய அமைப்பை உருவாக்கும்.

- **உலகின் மிகச் சிறந்த விமான நிலையம் 2023**

✓ சிங்கப்பூரின் ஜெம் சாங்கி விமான நிலையம் மீண்டும், 'உலகின் மிகச் சிறந்த விமான நிலையம் 2023' என்று பெயரிடப்பட்டுள்ளது.

✓ தென்கிழக்கு ஆசியாவின் மிகவும் பரபரப்பான பயணிகள் மையங்களில் ஒன்றான சிங்கப்பூர் சாங்கி விமான நிலையம் 2023ஆம் ஆண்டிற்கான உலகின் சிறந்த விமான நிலையங்களின் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

✓ இந்த அழகிய விமான நிலையம், தொடர்ந்து எட்டு வருடங்களாக தனது தரவரிசையை தக்க வைத்துக் கொண்டுள்ளது.

# திட்டங்கள்

- **வைபவ் உதவித் தொகை திட்டம் (VAIBHAV Fellowship Scheme)**

✓ பிப்ரவரி 28 அன்று கொண்டாடப்படும் தேசிய அறிவியல் தினத்தை முன்னிட்டு, இந்திய அரசு வைபவ் உதவித் தொகை திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

✓ உலகெங்கிலும் சிறந்து விளங்கும் நிறுவனங்களுடன் கல்வி மற்றும் ஆராய்ச்சி ஒத்துழைப்பை ஊக்குவிப்பதன்மூலம் இந்தியாவின் உயர்கல்வி நிறுவனங்களின் ஆராய்ச்சித் திறனை மேம்படுத்துவதை இந்த புதிய முயற்சி நோக்கமாகக் கொண்டுள்ளது.

# இந்தியாவும் இதர நாடுகளும்

- **இளம் வல்லுநர்கள் திட்டம்**

✓ இந்தியாவும் இங்கிலாந்தும் - பிப்ரவரி 28 அன்று இளம் வல்லுநர்களின் திட்டத்தை அறிமுகப்படுத்தின.

✓ இங்கிலாந்து மற்றும் இந்தியா இடையே இளம் வல்லுநர்கள் திட்டத்தை நிறுவுவது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க படியாகக் கருதப்படுகிறது.

✓ இந்தத் திட்டம் மார்ச் 2023 முதல் அமலுக்கு வரும் மூன்று ஆண்டுகளுக்கான ஒப்பந்தமாகும்.

✓ இத்திட்டத்தின்மூலம், பட்டம் பெற்றுள்ள இந்தி குடிமக்கள் இங்கிலாந்தில் இரண்டு ஆண்டுகள் வரை வசிக்கவும், பணி செய்யவும் அனுமதிக்கப்படுவர்.

- **டீக்கின் மற்றும் வோலோங்கோங் (Deakin and Wollongong)**

✓ ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த டீக்கின் மற்றும் வோலோங்கோங் - இந்தியாவில் வளாகங்களை அமைக்கும் முதல் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் ஆகும்.

✓ இந்த இரண்டு ஆஸ்திரேலிய பல்கலைக் கழங்களும், விரைவில் காந்திநகரில் உள்ள குஜராத் சர்வதேச நிதி தொழில்நுட்ப நகரத்தில் (Gujarat International Finance Tec-City) வளாகங்களை நிறுவும்.

✓ அடுத்த வாரம் ஆஸ்திரேலிய பிரதமர் அந்தோனி அல்பானீஸ் இந்தியாவுக்கு மேற்கொள்ளும் முதல் பயணத்தின்போது பல்கலைக் கழகங்கள் தங்கள் வளாகங்களை அமைப்பது தொடர்பான ஒப்பந்தத்தில் கையெழுத்திடும்.

✓

- **மெக் மஹோன் கோடு (McMahon Line)**

✓ அமெரிக்கா - இந்தியாவின் அருணாச்சலப்பிரதேசத்திற்கும் சீனாவிற்கும் இடையிலான சர்வதேச எல்லையாக மக்மஹோன் கோடுகளை முறையாக அங்கீகரித்துள்ளது.

✓ இந்நிலையில், கடந்த மாதம் மார்ச் 14இல், முதன் முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட இரு தரப்பு தீர்மானத்தை, அமெரிக்க செனட் சபை நிறைவேற்றியுள்ளது.

✓ வடகிழக்கு மாநிலமான அருணாச்சலப் பிரதேசம் சீனப் பகுதிக்கு உட்பட்டது என்ற சீனாவின் கோரிக்கையை அந்தத் தீர்மானம் நிராகரித்தது.

- **இந்தியா – வங்காளதேசம் நட்புக் குழாய் (India-Bangladesh Friendship Pipeline)**

✓ பிரதமர் நரேந்திர மோடி மற்றும் வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனா – மார்ச் 18 அன்று, ரூ.377 கோடி இந்தியா – வங்காளதேச நட்புக் குழாய் அமைப்பை மெய்நிகராக கூட்டாக தொடங்கி வைத்தனர். 131.5 கிமீ நீளமுள்ள இந்த பைப் லைன் அசாமில் உள்ள நுமாலிகரில் இருந்து வங்காளதேசத்திற்கு ஆண்டுக்கு 1 மில்லியன் டன்கள் வரை டீசல் சப்ளை செய்யும்.

✓ இந்தியா – வங்காளதேசம் நட்புக் குழாய் என்பது இந்தியாவிற்கும் வங்காளதேசத்திற்கும் இடையிலான முதல் எல்லை கடந்த எரிபொருள் குழாய் ஆகும்.

- **பாதுகாப்பு ஒத்துழைப்பு பேச்சுவார்த்தை**

✓ இந்தியாவும் மாலத் தீவுகளும் - 4வது பாதுகாப்பு ஒத்துழைப்பு பேச்சுவார்த்தையை மார்ச் 19 அன்று மாலேயில் நடத்தின.

- ✓ இந்தப் பேச்சுவார்த்தையில் இருதரப்பு பாதுகாப்பு பயிற்சிகள் பற்றி விவாதிக்கப்பட்டது. இரண்டு நாடுகளும் இந்த பயிற்சிகளை தீவிரமாக மேற்கொள்ள ஒப்புக் கொண்டன.
- ✓ பாதுகாப்பு ஒத்துழைப்பு பேச்சு வார்த்தை என்பது இந்த இரண்டு நாடுகளுக்கும் இடையே மேற்கொள்ளப்பட்ட மிக உயர்ந்த நிறுவனமாக்கப்பட்ட ஊடாடும் பொறிமுறையாகும்.

# மாநாடுகளும் உச்சி மாநாடுகளும்

➢ **தர்மா தம்மா மாநாடு**

✓ ஜனாதிபதி திரௌபதி முர்மு – மத்தியப் பிரதேசத்தின் போபாலில் 7வது சர்வதேச தர்ம தம்மா மாநாட்டை மார்ச் 3 அன்று தொடங்கி வைத்தார்.

✓ இந்த மூன்றுநாள் மாநாடு 'புதிய சகாப்தத்திற்கான கிழக்கு மனித நேயம்' என்ற தொனிப் பொருளில் நடைபெற்றது.

✓ இந்த மாநாடு, வளர்ந்து வரும் புதிய உலக ஒழுங்கிற்கு ஒரு தத்துவ கூட்டமைப்பை உருவாக்க, தர்ம-தம்ம மரபுகளைச் சேர்ந்த மத, அரசியல் மற்றும் சிந்தனைத் தலைவர்களை ஒன்றிணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

➢ **பி2பி மாநாடு மற்றும் பாரம்பரிய மருத்துவம் பற்றிய கண்காட்சி**

✓ ஒன்றிய ஆயுஷ் மற்றும் துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழிகள் அமைச்சர் சர்பானந்தா சோனோவால் - மார்ச் 2, 2023 அன்று பாரம்பரிய மருத்துவம் பற்றிய முதல் பி2பி மாநாடு மற்றும் கண்காட்சியைத் தொடங்கி வைத்தார்.

✓ ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின்கீழ் பாரம்பரிய மருத்துவம் பற்றிய பி2பி மாநாடு மற்றும் கண்காட்சி மார்ச் 5, 2023 வரை, அஸ்ஸாமின் கவுகாத்தியில் நடைபெற உள்ளது.

➢ **யோகா மஹோத்சவ், 2023**

✓ ஒன்றிய துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழிகள் மற்றும் ஆயுஷ் அமைச்சர் சர்பானந்தா சோனோவால் - யோகா மஹோத்சவ், 2023ஐ மார்ச் 13 அன்று தொடங்கி வைத்தார்.

✓ யோகா மஹோத்சவ், 2014ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையில் தொடங்கப்பட்டதைத் தொடர்ந்து 2015ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 21ஆம் தேதி சர்வதேச யோகா தினத்திற்கான 100 நாட்கள் கவுண்ட் டவுனைத் தொடங்குகிறது.

➢ **உலகளாவிய சிறுதானியங்கள் மாநாடு (Global Millets (Shree Anna) Conference)**

✓ பிரதமர் நரேந்திர மோடி – மார்ச் 18 அன்று புதுதில்லியின் பூசாவில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவன வளாகத்தில் உலகளாவிய சிறுதானிய (ஸ்ரீ அன்னா) மாநாட்டைத் தொடங்கி வைத்தார்.

✓ இந்த இரண்டு நாள் உலகளாவிய மாநாட்டில் சிறு தானியங்கள் (ஸ்ரீ அன்னா) தொடர்பான அனைத்து முக்கிய பிரச்சினைகள் பற்றிய அமர்வுகள் நடைபெறும்.

✓ இந்தியாவின் முன்மொழிவின் அடிப்படையில், 2023ஆம் ஆண்டை ஐக்கிய நாடுகள் பொதுச் சபை சர்வதேச சிறு தானிய ஆண்டாக (International Year of Millets) அறிவித்தது.

➢ **ஜி20 ஆர்ஐஐஜி மாநாடு (G20 RIIG Conference)**

✓ ஜி20 ஆர்ஐஐஜி (Resource Efficiency and Circular Economy Innovation Group) மாநாடு மார்ச் 23 அன்று நடைபெற உள்ளது. இது உலகம் முழுவதும் உள்ள வல்லுநர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் தொழில்துறை தலைவர்களை ஒன்றிணைக்கிறது.

✓ இந்த மாநாடு ஒரு நிலையான மற்றும் வட்ட உயிர் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் கருப்பொருளில் கவனம் செலுத்தும், மேலும் விவாதங்கள் இந்த முக்கியமான பிரச்சினை தொடர்பான பல்வேறு தலைப்புகளை உள்ளடக்கியதாக இருக்கும்.

- **ஒரே உலகம் காசநோய் உச்சி மாநாடு 2023**

✓ மார்ச் 24 அன்று, உலக காசநோய் தினத்தை முன்னிட்டு வாரணாசியில் நடைபெற்ற 'ஒரே உலகம் காசநோய் உச்சி மாநாடு 2023'இல் பிரதமர் உரையாற்றினார்.

✓ இந்த நிகழ்ச்சியின்போது, காசநோய் - முக்த் பஞ்சாயத்து, குறுகிய காசநோய் தடுப்பு சிகிச்சை (TB Preventive Treatment), காசநோய்க்கான குடும்பத்தை மையமாகக் கொண்ட பராமரிப்பு மாதிரி மற்றும் இந்தியாவின் வருடாந்திர காசநோய் அறிக்கை 2023 வெளியீடு உள்ளிட்ட பல்வேறு முயற்சிகளை பிரதமர் தொடங்கி வைத்தார்.

✓ காசநோயை நிறுத்துவோம் கூட்டாண்மை (Stop TB Partnership) என்பது ஐக்கிய நாடுகள் சபையால் நடத்தப்படும் ஒரு அமைப்பாகும். இது நோயால் பாதிக்கப்பட்ட மக்கள், சமூகங்கள் மற்றும் நாடுகளின் குரல்களை ஒலிக்கச் செய்கிறது.

- **உமாஜின் சென்னை 2023 (Umagine Chennai 2023)**

✓ மார்ச் 23 முதல் 25 வரை சென்னையில் நடைபெறும் தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகள் குறித்த ஆசியாவின் மிகப்பெரிய உச்சி மாநாடான உமாஜின் சென்னை 2023ல் 12,000 பேர் பதிவு செய்துள்ளதாக ஒன்றிய தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் அமைச்சர் தெரிவித்தார்.

✓ உமாஜின் சென்னை 2023ஐ முன்னிட்டு இந்திய தொழில்நுட்பக் கழகம், சென்னை ஆராய்ச்சிப் பூங்காவில் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு நிகழ்ச்சியில், 'முன்னதாக, இது போன்ற ஒரு நிகழ்வுக்காக, நாம் வெளிநாடு செல்ல வேண்டியிருந்தது. ஆனால் இப்போது தமிழகத்தில் ஏற்பாடு செய்து வருகிறோம்' என்று அமைச்சர் தெரிவித்தார்.

- **ஆராய்ச்சி மற்றும் புதுமை முன்முயற்சி கூடுதல் (Research and Innovation Initiative Gathering)**

✓ இரண்டு நாள் ஜி20 ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்பு முன் முயற்சி கூடுதல் மாநாடு – அசாமின் திப்ருகாரில் மார்ச் 24 அன்று நிறைவடைந்தது.

✓ இந்த மாநாட்டில் நிலையான மற்றும் வட்டமான உயிர் பொருளாதாரத்தை உருவாக்குவதற்கான வழிகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

✓ இந்த மாநாட்டின்போது கவனம் செலுத்தப்பட்ட பகுதிகளில், விவசாயத்தில் சவால்கள் மற்றும் வாய்ப்புகள், தொழில்துறையின் கார்பன் இறக்கம் மற்றும் உயிர் ஆற்றல் மற்றும் உயிர் வள மேலாண்மை ஆகியவை அடங்கும்.

- **ஜனநாயகத்திற்கான உச்சி மாநாடு**

✓ மார்ச் 29 அன்று, பிரதமர் நரேந்திர மோடி – ஜோ பைடன் இணைந்து நடத்திய தலைவர்கள் நிலையான முழுமையான கூட்டத்தில் அமெரிக்க 'ஜனநாயகத்திற்கான உச்சி மாநாட்டில்' உரையாற்றினார்.

✓ தனது உரையின்போது, பிரதமர் நரேந்திர மோடி - இந்தியாவின் ஜனநாயகம் மற்றும் 'இந்திய குடிமக்களின் கூட்டு முயற்சிகளை' பாராட்டினார்.

✓ ஜனநாயகத்தை வலுப்படுத்துதல் மற்றும் எதேச்சதிகாரத்திற்கு எதிராக பாதுகாத்தல், ஊழலுக்கு தீர்வு காண்பது மற்றும் எதிர்த்துப் போராடுவது, மனித உரிகைளுக்கான மரியாதையை ஊக்குவித்தல் ஆகிய மூன்று முக்கிய அம்சங்களில் இந்த உச்சி மாநாடு கவனம் செலுத்துகிறது.

# பாதுகாப்பு

## ➢ ஷின்யு மைத்ரி பயிற்சி

- ✓ இந்திய விமானப்படை 1 முதல் 2, மார்ச் 2023 வரை ஜப்பான் வான் தற்காப்புப் படையுடன் இணைந்து ஷின்யு மைத்ரி பயிற்சியில் பங்கேற்கிறது.
- ✓ இந்தோ-ஜப்பான் கூட்டு இராணுவப் பயிற்சியான தர்ம கார்டியனை ஒட்டி இந்தப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- ✓ தர்ம கார்டியன் பிப்ரவரி 13 முதல் மார்ச் 2 வரை ஜப்பானில் உள்ள கோமாட்சுவில் நடத்தப்படுகிறது.

## ➢ ப்ரிஞ்செக்ஸ் (FRINJEX) -23

- ✓ இந்திய இராணுவமும் பிரான்ஸ் இராணுவமும் மார்ச் 7-8 தேதிகளில் கூட்டு இராணுவப் பயிற்சியான ப்ரிஞ்செக்ஸ்-23இல் பங்கேற்கின்றன.
- ✓ இந்தப் பயிற்சியின் நோக்கம், இந்த இரு நாடுகளுக்கு இடையே இயங்கும் திறன், ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்துவதாகும்.
- ✓ இந்தப் பயிற்சியின் கருப்பொருள், ‘போட்டியிடப்பட்ட சூழலில் மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரண நடவடிக்கைகள்’ என்ற அடிப்படையில் அமைந்துள்ளது. இந்தப் பயிற்சியானது தந்திரோபாய மட்டத்தில் இந்திய –பிரான்ஸ் நாடுகளுக்கு இடையே மூலோபாய கூட்டுறவை வலுப்படுத்தும்.

## ➢ சர்வதேச கடல்சார் பயிற்சி 2023

- ✓ 34 நாடுகளைக் கொண்ட கடற்படைக் குழுவான அமெரிக்கா தலைமையிலான ஒருங்கிணைந்த கடல்சார் படைகளால் ஏற்பாடு செய்யப்பட்ட கடல்சார் பயிற்சியில் பங்கேற்பதற்காக, தனது முதல் பயணமாக ஐஎன்எஸ் திரிகண்ட் பஹ்ரைனுக்கு வந்துள்ளது.
- ✓ ஐஎம்எக்ஸ் 23 மற்றும் கமாண்டர் டாஸ்க் ∴போர்சின் (கிழக்கு) துணைத் தளபதியான பிரெஞ்சு கடற்படையின் ரியர் ஆடம் ஜீன் மைக்கேல் மார்டினெட்டை ஐஎன்எஸ் திரிகண்ட் ஹோஸ்ட் செய்தது.

## ➢ ஷாலிசா தாமி (Shaliza Dhami)

- ✓ இந்திய விமானப் படையின் ஒரு பெண் அதிகாரிக்கான முதல் கமாண்ட் நியமனத்தில், குரூப் கேப்டன் ஷாலிசா தாமி, மேற்கத்திய செக்டாரில் ஒரு முன்னணி போர் பிரிவுக்கு தலைமை தாங்குவதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ளார் என்று இந்திய விமானப் படை செவ்வாய்க்கிழமை அன்று தெரிவித்தது.
- ✓ இரண்டு தடவைகளில் விமானப் படையின் தலைமைத் தளபதியால் பாராட்டப்பட்ட அந்த அதிகாரி, தற்போது முன்னணி கமாண்ட் தலைமையகத்தின் செயல்பாட்டுக் கிளையில் நியமிக்கப்பட்டுள்ளார்.

## ➢ எக்ஸ்பிரஸ் 2023 (IMX/CE-23)

- ✓ சர்வதேச கடல்சார் பயிற்சி – கட்லாஸ் எக்ஸ்பிரஸ் 2023 (IMX/CE-23) வளைகுடா பிராந்தியத்தில் பிப்ரவரி 26 முதல் மார்ச் 16, 2023 வரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- ✓ இந்தப் பயிற்சியானது கடல்சார் பாதுகாப்பை மேம்படுத்துவதையும், கடல்சார் வர்த்தகத்திற்கான பாதுகாப்பான கடல் பாதைகளை உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இதில் 50க்கும் மேற்பட்ட நாடுகள் மற்றும் சர்வதேச கடல்சார் முகமைகள் பங்கேற்கின்றன. இது மிகப்பெரிய பன்னாட்டு கடல் பயிற்சிகளில் ஒன்றாகும்.

APOLLO STUDY CENTRE

- ➢ **டிராபெக்ஸ் (TROPEX)-23**

✓ 2023க்கான தியேட்டர் நிலை செயல்பாட்டுத் தயார்நிலைப் பயிற்சி (Theatre Level Operational Readiness Exercise for 2023" - TROPEX-23) என்று அழைக்கப்படும் இந்திய கடற்படையின் பயிற்சி நவம்பர் 2022 முதல் மார்ச் 2023 வரை நான்கு மாதங்கள் அரபிக் கடலில் நடைபெற்று முடிந்தது.

✓ இந்த டிராபெக்ஸ் -23இல், தோராயமாக 70 இந்திய கடற்படை கப்பல்கள், ஆறு நீர்மூழ்கிக் கப்பல்கள் மற்றும் 75க்கும் மேற்பட்ட விமானங்கள் கலந்து கொண்டன.

✓ கடற்படையின் அமைதி நிலையிலிருந்து எதிரி நிலைக்கு மாறுவதைச் சோதிக்கும் வகையில் இந்த டிராப்பெக்ஸ் பயிற்சி பல கட்டங்களாக நடத்தப்பட்டது.

- ➢ **கடற்படைத் தளபதிகள் மாநாடு 2023**

✓ கடற்படைத் தளபதிகள் மாநாட்டின் முதல் பதிப்பு 2023 – சமீபத்தில் இந்தியாவின் முதல் உள்நாட்டு விமானம் தாங்கிக் கப்பலான ஐஎன்எஸ் விக்ராந்தில் நடைபெற்றது.

✓ இந்த மாநாடு கடற்படைத் தளபதிகள் இராணுவ-மூலோபாய மட்டத்தில் முக்கியமான பாதுகாப்புப் பிரச்சினைகள் பற்றி விவாதிக்க ஒரு தளமாக செயல்பட்டது.

✓ கடற்படைத் தளபதிகள் மாநாட்டின் முதல் கட்டம் கடலில் நடைபெற்றது, தற்போது முதல் முறையாக ஐஎன்எஸ் விக்ராந்த் கப்பலில் நடைபெற்றது.

- ➢ **கடல்சார் கூட்டாண்மை பயிற்சி (Maritime Partnership Exercise)**

✓ இந்திய கடற்படையின் உள்நாட்டிலேயே கட்டப்பட்ட வழிகாட்டப்பட்ட ஏவுகணை போர்க்கப்பலான ஐஎன்எஸ் சஹ்யாத்ரி, அரேபிய கடலில் பிரேஞ்சு கடற்படையின் கப்பல்களான எப்எஸ் டிக்மியூட் (FS Dixmude) என்ற மிஸ்ட்ரல் வகுப்பு இருவழி (நீர் மற்றும் நிலம்) தாக்குதல் கப்பல் மற்றும் எப்எஸ் லா ∴பயாட்டே (La Fayette) என்ற, லா ∴பயேட் வகுப்பு ∴பிரிகேட் உடன் கடல்சார் கூட்டாண்மை பயிற்சியில் பங்கேற்றது.

✓ இந்தக் கூட்டாண்மை பயிற்சி மார்ச் 10-11 அன்று நடத்தப்பட்டது.

- ➢ **லா பெரவுஸ் (La Perouse)**

✓ பலதரப்பு கடற்படைப் பயிற்சியின் மூன்றாவது பதிப்பாகிய 'லா பெரவுஸ்' மார்ச் 13 அன்று இந்தியப் பெருங்கடலில் தொடங்கியது.

✓ இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் லா பெரவுஸ் பயிற்சியானது பிரெஞ்சு கடற்படை, ராயல் ஆஸ்திரேலிய கடற்படை, இந்திய கடற்படை, ஜப்பானிய கடல்சார் தற்காப்புப் படை மற்றும் அமெரிக்க கடற்படை ஆகியவற்றால் நடத்தப்படுகிறது.

✓ இது கடல்சார் விழிப்புணர்வு மற்றும் கடல்சார் ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- ➢ **தைரியமான குருக்ஷேத்திரா (Bold Kurukshetra)**

✓ ஆபரேஷன் போல்ட் குருஷேத்திரா என்று அழைக்கப்படும் இருதரப்பு கவச பயிற்சியானது, மார்ச் 6-13, 2023 வரை, இந்தியாவில் உள்ள ஜோத்பூர் இராணுவ நிலையத்தில் நடைபெற்றது.

✓ இது 13வது பயிற்சியாகும். இதில் சிங்கப்பூர் இராணுவம் மற்றும் இந்திய இராணுவம் ஆகிய இரண்டும் கலந்து கொண்டன. இந்தத் தொடரின் முதல் கமாண்ட் பயிற்சியில் இரு படைகளும் கலந்து கொண்டன. இதில் கணினி போர் கேமிங் மற்றும் பட்டாலியன் மற்றும் பிரிகேட் மட்டங்களில் திட்டமிடல் கூறுகள் அடங்கும்.

 044-24339436, 044-42867555, 9840226187

## ➢ கடல் டிராகன் 23 பயிற்சி

- ✓ இந்திய கடற்படையானது, ‘கடல் டிராகன் 23 பயிற்சி’யின் மூன்றாவது பதிப்பில் பங்கேற்பதற்காக, மார்ச் 14, 2023 அன்று பி81 (P8I) விமானத்தை அமெரிக்காவின் குவாமுக்கு அனுப்பியது. இந்த பயிற்சியானது, அமெரிக்க கடற்படையால் ஏற்பாடு செய்யப்பட்ட நீண்ட தூர எம்ஆர் ஏஎஸ்டபிள்யூ (MR ASW) விமானங்களுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட பன்முக நீர்மூழ்கி எதிர்ப்புப் போர்ப் பயிற்சி ஆகும்.
- ✓ மார்ச் 15 முதல் மார்ச் 30, 2023 வரை திட்டமிடப்பட்ட இப்பயிற்சியானது, பங்கேற்கும் நாடுகளிடையே ஒருங்கிணைந்த ஏஎஸ்டபிள்யூ தந்திரங்களில் கவனம் செலுத்தும் மற்றும் மேம்பட்ட ஏஎஸ்டபிள்யூ பயிற்சிகளை உள்ளடக்கியதாக இருக்கும்.

## ➢ AFINDEX-2023

- ✓ ஆப்பிரிக்க - இந்திய களப் பயிற்சியின் இரண்டாவது பதிப்பு, AFINDEX 2023, மார்ச் 21-30 வரை பூனேயில் நடைபெறும்.
- ✓ இந்த நிகழ்வில் 21 ஆப்பிரிக்க நாடுகளின் இராணுவத் தளபதிகள் மற்றும் தலைவர்களின் பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள். மேலும், 24 ஆப்பிரிக்க இராணுவங்கள் சார்பாக, அவர்களின் குழுக்கள் அல்லது பார்வையாளர்களின் குழுக்கள் கலந்து கொள்கின்றனர்.

## ➢ கொங்கன் 2023

- ✓ இந்திய கடற்படைக்கும் இங்கிலாந்தின் ராயல் கடற்படைக்கும் இடையிலான வருடாந்திர இருதரப்பு கடல்சார் பயிற்சி ‘கொங்கன் 2023’ – மார்ச்20 முதல் 22 வரை அரபிக் கடலில் கொங்கன் கடற்கரையில் நடைபெற்றது.
- ✓ இந்தப் பயிற்சிகள் கடல்சார் நடவடிக்கைகளின் அனைத்து களங்களும் இடம் பெற்றிருந்தன – காற்று, மேற்பரப்பு மற்றும் துணை மேற்பரப்பு.

## ➢ வாயு பிரஹார் (Vayu Prahar)

- ✓ இந்திய இராணுவம் மற்றும் இந்திய விமானப்படை – கிழக்கு கமாண்டில் உள்ள உண்மையான கட்டுப்பாட்டுக் கோடு வழியாக மல்டி டொமைன் ஏர்-லேண்ட் எக்சர்சைஸ் ஆகிய வாயு பிரஹாரை கூட்டாக நடத்தியது.
- ✓ நான்கு நாட்கள் நீடித்த இந்த பயிற்சியில் இந்திய இராணுவம், விமானப்படை மற்றும் சிறப்புப் படை வீரர்கள் கலந்து கொண்டனர்.
- ✓ அருணாசலப் பிரதேசத்தில் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டை ஒட்டிய உயரமான நிலப்பரப்பில் மாச் இரண்டாவது வாரத்தில் இந்தப் பயிற்சி மேற்கொள்ளப்பட்டது.

## ➢ கோப்ரா வாரியர் பயிற்சி (Exercise Cobra Warrior)

- ✓ இந்திய விமானப்படையின் மிராஜ் 2000 விமானங்கள், கடந்த மூன்று வாரங்களாக இங்கிலாந்தில் கோப்ரா வாரியர் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றன.
- ✓ இங்கிலாந்து, பின்லாந்து, சுவீடன், தென்னாப்பிரிக்கா, சவூதி அரேபியா, அமெரிக்கா மற்றும் சிங்கப்பூர் உள்ளிட்ட ஆறு விமானப் படைகளுடன் இணைந்து இந்தக் கூட்டுப் பயிற்சி நடைபெற்று வருகிறது.

## ➢ ஹிம்ஷக்தி திட்டம் (Project Himshakti)

- ✓ மார்ச் 24 அன்று, பாதுகாப்பு அமைச்சகம் - இந்திய இராணுவத்திற்கான 'ஹம்ஷக்தி திட்டத்தின்'கீழ் இரண்டு ஒருங்கிணைந்த மின்னணு போர் முறைகளை வாங்குவதற்காக ரூ.3000 கோடி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- ✓ பாதுகாப்பு பொதுத் துறை நிறுவனமான பாரத் எலக்ட்ரானிக்ஸ் உடன் கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தம், 'இந்தியப் பொருட்களையே வாங்கு' (உள்நாட்டில் வடிவமைக்கப்பட்ட, உருவாக்கப்பட்ட மற்றும் தயாரிக்கப்பட்ட)' பிரிவின்கீழ் இடம் பெற்றுள்ளது.
- ✓ அரசின் மேக்-இன்-இந்தியா முன் முயற்சியின்படி, நாட்டை 'ஆத்மநிர்பர்' ஆக்கும் உள்நாட்டுத் திறன்களை மேம்படுத்துவதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

# நியமனங்கள்

- **ஜி ஜின்பிங் (Xi Jinping)**

✓ சீனாவின் அதிகாரம் படைத்த ஜி ஜின்பிங் 5 ஆண்டு கால அதிபராக மூன்றாவது முறையாக பதவியேற்றார்.

✓ சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்து அவர் 2012இல் ஆட்சிக்கு வந்தார்.

✓ அவர் சீன மக்கள் குடியரசின் அதிபராகவும் பணியாற்றினார்.

✓ அவரது கூட்டாளியான லி கியாங் சீனாவின் புதிய பிரதமராக மற்றவர்களுடன் சேர்ந்து ஜி ஜின்பிங்கின் அமைச்சரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

- **10வது கல்கா ஜெட்சன் தம்பா ரின்போச்சே (Khalkha Jetsun Dhampa Rinpoche)**

✓ மார்ச் 27 அன்று, திபெத்திய ஆன்மிகத் தலைவர் தலாய் லாமா – அமெரிக்காவில் பிறந்த மங்கோலியச் சிறுவன் அகிடாவ் என்ற எட்டு வயது சிறுவனை ஆன்மீகத் தலைவரின் மறு அவதாரம் என்று பெயரிட்டார்.

✓ அந்தச் சிறுவனுக்கு திபெத்திய பௌத்தத்தின் மூன்றாவது மிக முக்கியமான தலைவரான 10வது கல்கா ஜெட்சன் தம்பா ரின்போச்சே என்று பெயரிடப்பட்டது.

✓ இந்த நிகழ்ச்சியில் 5000 துறவிகள் மற்றும் கன்னியாஸ்திரிகள், 600 மங்கோலியர்கள் மற்றும் பிற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

- **ஹம்சா யூசுப்**

✓ ஸ்காட்லாந்தின் ஆளும் கட்சியான ஸ்காட்டிஷ் தேசிய கட்சி (Scottish National Party) – மார்ச் 27 அன்று அதன் புதிய தலைவராக பாகிஸ்தானிய வம்சாவளி ஹம்சா யூசுப்பைத் தேர்வு செய்தது.

✓ இதன் மூலமாக அந்த நாட்டை வழிநடத்தும் முதல் கருப்பினரல்லாதவர் மற்றும் முதல் முஸ்லிம் என்ற பெருமையையும் அவர் பெற்றுள்ளார்.

✓ கிளாஸ்கோவில் பிறந்த தெற்காசிய குடியேற்றவாசிகளின் முதல் மகனாகிய இவர் முதல் அமைச்சராகப் பதவியேற்க உள்ளார்.

# விருதுகள்

## ➢ ஃபிஃபா விருதுகள் (FIFA Awards)

- ✓ பிப்ரவரி 27 அன்று, உலகக் கோப்பை சாம்பியனாகிய லியோனல் மெஸ்ஸி – 14 ஆண்டுகளில் ஏழாவது முறையாக, ஃபிஃபாவின் சிறந்த ஆண் வீரருக்கான விருதைப் பெற்றார்.
- ✓ கடந்த ஆண்டு கத்தாரில் நடைபெற்ற எம்பாப்பெயின் பிரான்சுக்கு எதிரான காவிய இறுதிப் போட்டியில் அர்ஜென்டினாவை உலகக் கோப்பைக்கு வழிநடத்திய பிறகு மெஸ்ஸி எம்பாப்பே மற்றும் கரீம் பென்சிமாவுக்கு எதிராக சிறந்த வீரர் என்று தேர்வு செய்யப்பட்டார்.
- ✓ ஃபிஃபா விருதுகளுக்கான வாக்கெடுப்பில், மெஸ்ஸி 52 புள்ளிகளையும், எம்பாப்பே 44 புள்ளிகளையும், பென்சிமா 34 புள்ளிகளையும் வென்றனர்.

## ➢ போர்ட்டர் பரிசு 2023

- ✓ போர்ட்டர் பரிசு 2023 சமீபத்தில் இந்திய அரசின் மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்திற்கு வழங்கப்பட்டது.
- ✓ இந்த விருது சுகாதாரத் துறையில், குறிப்பாக கோவிட்-19 பெருந்தொற்றின்போது இந்த அமைச்சகத்தின் சாதனைகளை அங்கீகரித்துள்ளது.
- ✓ 2.5 பில்லியனுக்கும் அதிகமான கோவிட்-19 தடுப்பூசிகளை இந்தியா வெற்றிகரமாக வழங்கியதையும், ஆஷா தொழிலாளர்கள் போன்ற பங்குதாரர்களின் பங்கையும் இது அங்கீகரித்தது.
- ✓ பொருளாதார நிபுணர் மற்றும் ஆராய்ச்சியாளரான மைக்கேல் இ. போர்ட்டரின் நினைவாக இந்தப் பரிசு வழங்கப்படுகிறது.

## ➢ அரசு தலைமைத்துவ விருது 2023 (Government Leadership Award 2023)

- ✓ இந்தியா – தொலைத் தொடர்புக் கொள்கை மற்றும் ஒழுங்குமுறையில் சிறந்த நடைமுறைகளை செயல்படுத்தியதற்காக ஜிஎஸ்எம்ஏ (GSMA) வின் அரசு தலைமைத்துவ விருது 2023 ஐ வென்றுள்ளது.
- ✓ பார்சிலோனாவில் ஜிஎஸ்எம்ஏ-ன் மொபைல் உலக காங்கிரஸ் 2023 நிகழ்வில் இந்த விருது வழங்கப்பட்டது.
- ✓ ஜிஎஸ்எம்ஏவின் ‘அரசு தலைமைத்துவ விருது’ மொபைல் இணைப்புக்கான சிறந்த ஒழுங்குமுறைக் கொள்கைகளை நிறுவுவதில் உலகத் தரம் வாய்ந்த தலைமைத்துவத்தை அங்கீகரிக்கிறது.

## ➢ 2022ஆம் ஆண்டிற்கான பிபிசி இந்திய விளையாட்டு வீராங்கனை விருது

- ✓ பளுதூக்கும் வீராங்கனை மீராபாய் சானு 2022 பிபிசி இந்திய விளையாட்டு வீராங்கனைக்கான விருதை 5 மார்ச் 2023 அன்று வென்றார்.
- ✓ இவர் 2021ஆம் ஆண்டிற்கான விருதை வென்ற பிறகு தொடர்ச்சியாக இரண்டு முறை இந்த விருதை வென்ற முதல் தடகள வீராங்கனை ஆனார்.

## ➢ அவ்வையார் விருது 2023

- ✓ மார்ச் 8 ஆம் தேதி, சென்னை எத்திராஜ் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற சர்வதேச மகளிர் தின நிகழ்ச்சியில், உதகமண்டலத்தைச் சேர்ந்த 90 வயதான எழுத்தாளர் மற்றும் சமூக சேவகர் ஆர். கமலம் சின்னசாமிக்கு 2023ஆம் ஆண்டுக்கான அவ்வையார் விருதை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வழங்கினார்.

- **பெண் குழந்தைகளுக்கு அதிகாரமளிக்கும் விருது 2022-23**
  - ✓ பல மாடிக் கட்டிடங்களில் லிப்ட் பழுது பார்க்கும்போது ஏற்படும் உயிரிழப்புகளைத் தடுப்பதற்கு புதிய கருவியைக் கண்டுபிடித்ததற்காக சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த 11ஆம் வகுப்பு மாணவர் எம். இளம்பிறைக்கு 2022-23ஆம் ஆண்டுக்கான பெண் குழந்தை அதிகாரமளிப்பு விருதை முதலமைச்சர் வழங்கினார்.

- **95வது அகாடமி விருதுகள் - நாட்டு நாட்டு பாடல்**
  - ✓ எஸ்எஸ் ராஜமௌலியின் ஆர்ஆர்ஆர் - அமெரிக்காவின் லாஸ் ஏஞ்செல்ஸ் நகரில் நடைபெற்ற 95வது அகாடமி விருது விழாவில், ஆஸ்கார் விருதை வென்ற முதல் இந்திய திரைப்படம் என்ற சாதனையைப் படைத்துள்ளது.
  - ✓ எம்.எம். கீரவாணியின் இசையமைப்பில் இப்படத்தில் இடம்பெற்ற 'நாட்டு நாட்டு' பாடல் ஒலிப்பதிவுக்கு சிறந்த அசல் பாடலுக்கான விருது வழங்கப்பட்டது.
  - ✓ இந்தப் பாடலை எழுதியவர் சந்திரபோஸ், பாடியவர்கள் ராகுல் சிப்ளிகஞ்ச் மற்றும் கால பைரவா. இந்தப் பாடல் உக்ரைனில் உள்ள கியேவில் உள்ள மரின்ஸ்கி அரண்மனையில் படமாக்கப்பட்டது.
  - ✓ முன்னதாக, ஆர்ஆர்ஆர்-இன் பிரபலமான இந்தப் பாடல், கோல்டன் குளோப்ஸ் 2023 இல் பெரிய வெற்றியைப் பெற்றது.

- **தி எலி∴பண்ட் விஸ்பர்ஸ் (The Elephant Whisperers)**
  - ✓ கார்த்திகி கோன்சால்வ்ஸ் மற்றும் குனீத் மோங்கா ஆகியோரின் நெட்பிக்ஸ் ஆவணப்பட குறும்படமாகிய தி எலி∴பண்ட் விஸ்பர்ஸ், 95வது அகாடமி விருதுகளில் சிறந்த ஆவணப்பட குறும்பட வகையை வென்றுள்ளது.
  - ✓ இந்தப் பிரிவில் அகாடமி விருது பெற்ற முதல் இந்தியத் திரைப்படம் இதுவாகும்.
  - ✓ இந்தப் படம் முதுமலை தேசிய பூங்காவில் எடுக்கப்பட்டது.

- **பிசிபிக் பகுதி பயண எழுத்தாளர்கள் சங்க விருது (Pacific Area Travel Writers Association Award)**
  - ✓ ஜெர்மனியின் பெர்லினில் நடைபெற்ற சர்வதேச பயணப் போக்குவரத்துக் கழகம் - 2023இல் தமிழ்நாடு, பசிபிக் பகுதி பயண எழுத்தாளர்கள் சங்கத்தின் சர்வதேச பயண விருதை வென்றது.
  - ✓ பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்திற்கான சிறந்த சுற்றுலாத்தலம் என்ற பிரிவின்கீழ் தமிழ்நாடு இந்த விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டது.
  - ✓ நாடு முழுவதிலும் சிறந்த சுற்றுலாத்துறை அமைச்சராக தமிழக சுற்றுலாத் துறை அமைச்சர் கே. ராமச்சந்திரன் தேர்வு செய்யப்பட்டார்.

- **கோல்டன் சிட்டி கேட் சுற்றுலா விருதுகளில் கோல்டன் மற்றும் சில்வர் ஸ்டார் (Golden & Silver Star at 'Golden City Gate Tourism Awards)**
  - ✓ சர்வதேச கோல்டன் சிட்டி கேட் சுற்றுலா விருதுகள் 2023 'டிவி-சினிமா கமர்ஷியல் இண்டர்நேஷனல் மற்றும் சர்வதேச நாடுகள்' ஆகிய பிரிவுகளில் முறையே இந்திய சுற்றுலா அமைச்சகமும் இந்திய அரசாங்கமும் வென்றன.
  - ✓ மார்ச் 8, 2023 அன்று, பெர்லினில் உள்ள ஐடிபி-இல், இந்திய அரசின் செயலாளர் (சுற்றுலா) ஸ்ரீஅரவிந்த் சிங், இந்த கௌரவத்தை ஏற்றுக் கொண்டார்.

➢ **இந்த ஆண்டின் சிறந்த ஆளுநர்**

✓ சர்வதேச பொருளாதார ஆராய்ச்சி இதழான சென்ட்ரல் பேங்கிங் வழங்கிய 2023ஆம் ஆண்டிற்கான 'ஆண்டின் சிறந்த கவர்னர்' விருதை ரிசர்வ் வங்கியின் ஆளுநர் சக்தி காந்ததாஸ் பெற்றார்.

✓ 2018இல் ஐஎல் மற்றும் எப்எஸ் (IL&FS) நெருக்கடிக்குப் பிறகு என்பிஎப்சி (NBFC) துறையை நிர்வகிக்கும் விதிமுறைகளை வலுப்படுத்துவதில் அவர் ஆற்றிய பணி, வங்கிகளின் சொத்து தரத்தை மேம்படுத்துதல் மற்றும் கோவிட்-19 நெருக்கடி மேலாண்மை ஆகியவை இவரை அங்கீகரித்தமைக்கான காரணங்களாக குறிப்பிடப்பட்டுள்ளன.

➢ **சங்கீத கலாநிதி விருது**

✓ புகழ்பெற்ற கர்நாடக இசைக் கலைஞரும், இசைக் கலைஞருமாகிய பாம்பே ஜெயஸ்ரீக்கு மியூசிக் அகாடமியின் மதிப்புமிக்க சங்கீத கலாநிதி விருது வழங்கப்பட உள்ளது.

✓ பதமஸ்ரீ விருது பெற்றுள்ள பாம்பே ஜெயஸ்ரீ, நாட்டின் தலைசிறந்த கர்நாடக இசைக்கலைஞர்களில் ஒருவர். அவர் மெல்லிசை மற்றும் தியானப் பாடலுக்கும் பெயர் பெற்றவர்.

➢ **தி ஆர்டர் டெஸ் பால்ம்ஸ் அகாடமிக்ஸ் (The Order des Palmes Academiques)**

✓ பிரெஞ்சு அரசு – சென்னையைச் சேர்ந்த இரண்டு பிரெஞ்சு ஆசிரியர்களுக்கு இந்தத் துறையில் மிகப்பெரிய கௌரவமான 'தி ஆர்டர் டெஸ் பால்ம்ஸ் அகாடமிக்ஸ்' விருதை வழங்கி கௌரவித்துள்ளது.

✓ அலையன்ஸ் பிரான்சைஸ் ஆப் மெட்ராசின் பிரெஞ்சு ஆசிரியை சுமித்ரா முத்துக்குமார் மற்றும் லயோலா கல்லூரியில் பிரேஞ்சு உதவிப் பேராசிரியை நவிஸ் சிபில் அபர்னா ராய் ஆகியோருக்கு பிரெஞ்சு மொழியைப் பரப்புவதில் அவர்களின் சிறப்பான பணி மற்றும் அர்ப்பணிப்பைப் பாராட்டி இந்த விருது வழங்கப்படுகிறது.

➢ **ஏபெல் பரிசு (Abel Prize)**

✓ அர்ஜென்டினா – அமெரிக்க கணிதவியலாளர் லூயிஸ் கஃபரெல்லி (Luis Caffarelli) – கணிதத் துறையில் அவர் ஆற்றிய பங்களிப்பிற்காக இந்த ஆண்டு ஏபெல் பரிசை வென்றார்.

✓ எல்லை இல்லா சிக்கல்கள் மற்றும் மோங்கே-ஆம்பயர் சமன்பாடு உள்ளிட்ட நேரியல் அல்லாத பகுதி வேறுபாடு சமன்பாடுகளுக்கான ஒழுங்குமுறைக் கோட்பாட்டிற்கான அவரது முக்கிய பங்களிப்புகளுக்காக அவருக்கு ஏபெல் பரிசு வழங்கப்பட்டது.

➢ **வனவிலங்கு பாதுகாப்பு விருது 2023**

✓ ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசம், வனவிலங்குப் பாதுகாவலர் அலியா மிர் அவர்களுக்கு. பாதுகாப்பில் அவரது விதிவிலக்கான முயற்சிகளுக்காக இந்த விருதை வழங்கியுள்ளது.

✓ ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் இருந்து வனவிலங்கு எஸ்ஓஎஸ்-இல் பணிபுரியும் முதல் பெண்மணி ஆலியா ஆவார். இந்தக் கௌரவத்தைப் பெறும் இந்த பிராந்தியத்தின் முதல் பெண்மணியும் அவரே ஆவார்.

✓ ஜம்மு காஷ்மீர் மாநில கூட்டுக்காடுகள் அமைப்பு நடத்திய உலக வனவியல் தினவிழாவில் துணைநிலை ஆளுநர் மனோஜ் சின்ஹாவிடமிருந்து அவர் இந்த விருதைப் பெற்றார்.

# பொருளாதாரம்

➢ **ஜிஎஸ்டி – பிப்ரவரி 2023**

✓ 2023 பிப்ரவரி மாதத்தில் மொத்த சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) வருவாய் - ரூ.1,49,577 கோடியாக இருந்தது.

✓ 2023 பப்ரவரி மாதத்திற்கான வருவாய், 1.33இலட்சம் கோடியாக இருந்த பிப்ரவரி 2022 ஜிஎஸ்டி வருவாயை விட 12 விழுக்காடு அதிகமாகும்.

✓ பிப்ரவரி 2023 மாதத்தில் அதிக வசூலைப் பதிவு செய்துள்ள முக்கிய மாநிலங்கள் - தமிழ்நாடு -19 விழுக்காடு, கர்நாடகா -18 விழுக்காடு, மகாராஷ்டிரா -15 விழுக்காடு, உத்தரப் பிரதேசம் -14 விழுக்காடு மற்றும் குஜராத் - 8 விழுக்காடு வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன.

➢ **டிஜிட்டல் பணம் செலுத்துதல்கள் - 2026க்குள் 10 டிரில்லியன் டாலர்கள்**

✓ போஸ்டன் கன்சல்டிங் குழுமம் (Boston Consulting Group), இந்தியாவின் முன்னணி டிஜிட்டல் கட்டண நிறுவனமான போன்பே (PhonePe) உடன் இணைந்து, 'இந்தியாவில் டிஜிட்டல் பணம் செலுத்துதல்: 10 டிரில்லியன் அமெரிக்க டாலர்கள் வாய்ப்பு' என்ற தலைப்பில் ஒரு அறிக்கையை இன்று வெளியிட்டது.

✓ இந்தியாவின் டிஜிட்டல் பணம் செலுத்தும் சந்தை 2026ஆம் ஆண்டுக்குள் மூன்று மடங்காக 10 டிரில்லியன் டாலராக உயரும்.

✓ விரைவான வளர்ச்சியைக் காணும் ஒரு நாட்டில், உலகிலேயே வேகமாக வளர்ந்து வரும் ஃபின்டெக் நிலப்பரப்புகளில் இந்தியாவும் ஒன்று என்பதில் ஆச்சரியமில்லை. இதற்கு முதன்மையான காரணம் டிஜிட்டல் பணம் செலுத்துதல் பிரிவில் ஏற்பட்டுள்ள முன்னேற்றமே ஆகும்.

# புகழ்பெற்ற நபர்கள்

### ➢ ரிஸ்வானா

- ✓ உலக சுகாதார அமைப்பு, உலக செவித்திறன் தின சுவரொட்டியில் கேரள பெண்ணின் படத்தை இடம்பெறச் செய்துள்ளது.
- ✓ ரிஸ்வானா என்ற எம்பிபிஎஸ் மாணவி, சிறுவயதில் கோக்லியர் பொருத்துதல் சிகிச்சையை செய்து கொண்டார். அவரது நிலை, ஆரம்பத்திலேயே கண்டறிந்தால் நிரந்தர இயலாமையைத் தடுக்கலாம் என்பதை உணர்த்துவதாக உள்ளது.
- ✓ இந்திய உலக சுகாதார அமைப்பு, இந்த வலிமையான செய்தியை மில்லியன் கணக்கானவர்களுக்குப் பரப்புவதற்காக, உலக செவித்திறன் தினத்தன்று (மார்ச் 3) ரிஸ்வானாவின் கதையை தனது போஸ்டரில் இடம் பெறுவதற்காகத் தேர்வு செய்தது என்பது குறிப்பிடத்தக்கது.

### ➢ சுரேகா யாதவ்

- ✓ ஆசியாவின் முதல் பெண் லோகோ பைலட் சுரேகா யாதவ் - புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட வந்தே பாரத் விரைவு இரயிலை இயக்கும் முதல் பெண்மணி என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.
- ✓ மார்ச் 13 அன்று, மும்பையில் உள்ள சோலாப்பூர் நிலையம் மற்றும் சத்ரபதி சிவாஜி மகாராஜ் டெர்மினஸ் இடையே பகுதி அதிவேக இரயிலை இயக்கியதன் மூலம், சுரேகா யாதவ் இந்த சாதனையைப் படைத்தார்.
- ✓ மேற்கு மகாராஷ்டிரா பிராந்தியத்தில் உள்ள சதாராவைச் சேர்ந்த சுரேகா யாதவ் 1988இல் இந்தியாவின் முதல் பெண் இரயில் ஓட்டுநரானார்.

### ➢ கர்னல் கீதா ராணா

- ✓ கர்னல் கீதா ராணா – சீனாவை ஒட்டிய கிழக்கு லடாக் பிரிவில் சுதந்திரமான களப்பணிமனையின் தலைமைப் பொறுப்பை ஏற்ற முதல் பெண் அதிகாரி ஆனார்.
- ✓ இந்திய இராணுவம், பிப்ரவரி இறுதியில், மருத்துவத் துறைக்கு வெளியேயும் முதல் முறையாக பெண் அதிகாரிகளை தலைமைப் பொறுப்புக்கு நியமிக்கத் தொடங்கிய பிறகு ராணாவின் நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- ✓ ராணா சென்னையில் உள்ள அதிகாரிகள் பயிற்சி அகாடமியில் பயிற்சி பெற்று, 2000இல் ராணுவத்தில் சேர்ந்தார்

### ➢ ரவி சவுத்ரி

- ✓ அமெரிக்க செனட் - இந்திய அமெரிக்க விமான சோதனைப் பொறியாளர் ரவி சௌத்ரியை அமெரிக்க விமானப்படையின் உதவி பாதுகாப்பு செயலாளராக நியமித்துள்ளது. இது பென்டகனின் உயர்மட்ட சிவிலியன் தலைமைப் பதவிகளில் ஒன்றாகும்.
- ✓ மார்ச் 15 அன்று, இந்த முன்னாள் விமானப்படை அதிகாரியின் நியமனத்தை உறுதி செய்வதற்காக செனட் 65 க்கு 29 என்று வாக்களித்தது.
- ✓ 1993 முதல் 2015 வரை அமெரிக்க விமானப் படையில் தனது சேவையின்போது, சவுத்ரி பல்வேறு செயல்பாட்டு, பொறியியல் மற்றும் மூத்த பணியாளருக்கான பணிகளை முடித்தார்.

- **கிருஷ்ண பிரகாஷ்**

✓ கேட்வே ஆப் இந்தியாவிலிருந்து எலி∴பெண்டா குகைக்கு நீந்திய முதல் நபர்.

✓ 'நீரில் மூழ்குவதைத் தடுக்கும் விழிப்புணர்வு' பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக, இந்திய காவல் சேவை அதிகாரி கிருஷ்ண பிரகாஷ், கேட்வே ஆப் இந்தியாவிலிருந்து மும்பையின் எலிபெண்டா குகைகளுக்கு நீந்திச் சென்றார்.

✓ 16.20 கி.மீ தூரத்தை வெறும் 5 மணி 26 நிமிடங்களில் முடித்து வரலாற்றில் இந்த சாதனையைப் படைத்த முதல் நபர் என்று பெயர் பெற்றார்.

APOLLO STUDY CENTRE

# அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச் சூழல்

## ➢ தில்யர்டெம்பைட்ஸ் (Tillyardembiids)

- ✓ அறியப்பட்ட மிகப் பழமையான மற்றும் உலகின் முதல் தாவர மகரந்தச் சேர்க்கைக் காரணியாகிய ‘தில்யர்டெம்பைட்ஸ்’ பூச்சியின் புதை படிமங்கள் மார்ச் 2023ல் ரஷ்யாவில் கண்டுபிடிக்கப்பட்டன.
- ✓ இவை ரஷ்யாவின் செகர்டா கிராமத்திற்கு அருகில் உள்ள ஆற்றங்கரையில் கண்டுபிடிக்கப்பட்டன.
- ✓ இவை சுமார் 280 மில்லியன் ஆண்டுகள் பழமையானவை என மதிப்பிடப்பட்டுள்ளன. இவை முன்னர் அறியப்பட்ட மகரந்தத்தால் மூடப்பட்ட பூச்சிகளுக்கு சுமார் 120 மில்லியன் ஆண்டுகளுக்கு முற்பட்டவை ஆகும்.

## ➢ மெகா டிராப்பிக்ஸ் -1 (Megha-Tropiques-1)

- ✓ இஸ்ரோ – நீக்கப்பட்ட மெகா – டிராபிக்ஸ்-1 அல்லது எம்டி-1 செயற்கைக் கோளுக்கான கட்டுப்பாட்டு மறுநுழைவை மார்ச் 7 அன்று வெற்றிகரமாக முடித்தது.
- ✓ ஆகஸ்ட் 2022 முதல் சுமார் 120 கிலோ எரிபொருளைச் செலவழித்து, 20 தந்திரங்கள் மூலம் செயற்கைக் கோளின் பெரிஜியை (பூமிக்கு அருகில் உள்ள புள்ளி) இஸ்ரோ படிப்படியாகக் குறைத்தது.
- ✓ செயற்கைக்கோள் பூமியின் வளிமண்டலத்தில் மீண்டும் நுழைந்து பசிபிக் பெருங்கடலில் சிதைந்திருக்கும் என்பதை சமீபத்திய டெலிமெட்ரி உறுதிப்படுத்தியுள்ளது.

## ➢ நாசா - இஸ்ரோ செயற்கை துளை ரேடார் (NASA-ISRO Synthetic Aperture Radar - NISAR)

- ✓ மார்ச் 7 அன்று, அமெரிக்க துணைத் தூதரகம், சென்னை – நாசா - இஸ்ரோ செயற்கைத் துறை ரேடார் (நிசார்). கலிபோர்னியாவில் உள்ள நாசா ஜேபிஎல்லில் இருந்து அமெரிக்க விமானப்படையின் சி-17 விமானத்தில் பெங்களூருவில் தரையிறங்கியது என்று தெரிவித்தது.
- ✓ நிசார், புவி கண்காணிப்பு செயற்கைக்கோள் ஆகும். இது ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் இருந்து 2024 ஜனவரியில் ஏவப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ➢ மைமியூசேமியா சிலோனிகா (Mimeusemia ceylonica)

- ✓ இந்தியாவில் முதல் முறையாக தமிழ்நாட்டில் தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் மைமியூசேமியா சிலோனிகா என்ற ஒரு அரிய வகை அந்துப்பூச்சி இனத்தை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- ✓ 2018 முதல் மாதத்திற்கு இரண்டு முறை நடத்தப்படும் அந்துப்பூச்சிகள் பற்றிய ஆய்வின் அடிப்படையில் இந்தக் கண்டுபிடிப்புகள் நிகழ்த்தப்பட்டு உள்ளன.
- ✓ ஆராய்ச்சியாளர்களின் கூற்றுப்படி, ஜார்ஜ் ஹாம்ப்சன் 1893ஆம் ஆண்டில் இலங்கையில் திருகோணமலையில் மைமியூசேமியா சிலோனிகாவைப் பதிவு செய்தார். அதன்பிறகு இது உலகம் முழுவதிலும் வேறு எங்கும் பதிவு செய்யப்படவில்லை.

## ➢ இன்ஃப்ளுயென்சா துணை வகை H3N2

- ✓ கர்நாடகாவின் ஹாசன் மாவட்டத்தில் 82 வயது முதியவர் ஒருவரே இந்த ஆண்டு எச்3என்2 நோயால் இறந்தார்.

- ✓ எச்3என்2 என்பது மனிதரல்லாத இன்ஃப்ளூயென்சா வைரஸ் ஆகும். இது பொதுவாக பன்றிகளில் பரவுகிறது மற்றும் மனிதர்களைப் பாதிக்கிறது.
- ✓ இந்த வைரஸ் இன்ஃப்ளூயென்சா ஏ வைரசின் துணை வகை என்று அறியப்படுகிறது.

## ➢ தியானியா இண்டிகா (Thiania indica)

- ✓ சென்னையைச் சேர்ந்த சவீதா மருத்துவம் மற்றும் தொழில்நுட்ப அறிவியல் கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் குழு, குதிக்கும் சிலந்தியின் புதிய வகை தியானியா இண்டிகாவைக் கண்டுபிடித்துள்ளனர். 2021 டிசம்பரில் செந்தூர்னி வனவிலங்கு சரணாலயத்தில் குளத்துப்புழாவிற்கு மேற்கொள்ளப்பட்ட பயணத்தின்போது இந்த சிலந்தி வகை கண்டுபிடிக்கப்பட்டது.
- ✓ தியானியா இண்டிகா, சால்டிசிடே குடும்பத்தைச் சேர்ந்த சி.எல். கோச் பேரினத்தைச் சேர்ந்தது ஆகும்.

## ➢ சிர்டோபோடியன் விந்தியா (Cyrtopodion Vindhya)

- ✓ வனவிலங்கு ஆராய்ச்சியாளர்கள் குழு ஒன்று, குஜராத்தின் தாஹோத் மற்றும் பஞ்சமஹால்ஸ் மாவட்டங்களில் சிர்டோபோடியன் விந்தியா என்ற ஒரு புதிய வகை வெறும் கால் கொண்ட கெக்கோவைக் கண்டுபிடித்துள்ளனர்.
- ✓ இந்த சமீபத்திய கண்டுபிடிப்பு காரணமாக, குஜராத்தில் விவரிக்கப்பட்டுள்ள உள்ளூர் ஊர்வன இனங்களின் எண்ணிக்கை கடந்த 15 ஆண்டுகளில் ஐந்தாக உயர்ந்துள்ளது.

## ➢ டிரிக்ரிசிஸ் போசிடோனியா (Trichrysis poseidonia)

- ✓ இரிஞ்சாலக்குடாவில் உள்ள கிறிஸ்ட் கல்லூரியில் உள்ள ஷட்பாதா பூச்சியியல் ஆராய்ச்சி ஆய்வகத்தின் ஆராய்ச்சியாளர்கள், தென்னிந்தியாவில் ஒரு புதிய வகை காக்கா குளவியைக் கண்டுபிடித்துள்ளனர்.
- ✓ இந்தக் குளவியின் வயிற்றுப் பற்கள் கடலின் கிரேக்கக் கடவுளான போஸிடானின் திரிசூலத்தை ஒத்திருப்பதால், இந்த இனத்திற்கு டிரிக்ரிசிஸ் போசிடோனியா என்று பெயரிடப்பட்டது.

## ➢ திரவ கண்ணாடி தொலைநோக்கி (Liquid Mirror Telescope)

- ✓ ஆசியாவின் மிகப்பெரிய நான்கு மீட்டர் சர்வதேச திரவக் கண்ணாடி தொலைநோக்கி – உத்தரகாண்டில் உள்ள தேவஸ்தல் கண்காணிப்பகத்தில் சமீபத்தில் திறந்து வைக்கப்பட்டது.
- ✓ ஒன்றிய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர், மார்ச் 21 அன்று இந்தக் கருவியின் திறப்பு விழாவை நடத்தினார்.
- ✓ இது மிகப்பெரிய துளை தொலைநோக்கி மற்றும் நாட்டின் முதல் ஆப்டிகல் சர்வே தொலைநோக்கி ஆகும்.

## ➢ வெர்னல் ஈக்வினாக்ஸ் (Vernal Equinox)

- ✓ வசந்த உத்தராயணம் அல்லது மார்ச் உத்தராயணம் மார்ச் 21, 2023 அன்று அனுசரிக்கப்படும். இது வடக்கு அரைக்கோளத்தில் வசந்த காலத்தின் தொடக்கத்தையும், தெற்கு அரைக் கோளத்தில் இலையுதிர் காலத்தையும் குறிக்கிறது.
- ✓ வசந்த உத்தராயணத்தின்போது, சூரியன் பூமத்திய ரேகைக்கு நேர் மேலே அமைந்திருக்கும். இந்த சமயத்தில் இரண்டு அரைக் கோளங்களும் ஏறக்குறைய சம அளவு சூரிய ஒளியைப் பெறுகின்றன. இதன் விளைவாக பகல் மற்றும் இரவின் நீளம் கிட்டத்தட்ட சமமாக இருக்கும்.

- **36 ஒரு இணைய செயற்கைக் கோள்கள் (36 One Web Satellites)**

✓ இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) – மார்ச் 26 அன்று எல்விஎம்-3ல் (LVM-3) 36 ஒரு இணைய செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்தியது.

✓ இந்த விண்கலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ்தவான் விண்வெளி மையத்தில் இருந்து விண்ணில் ஏவப்பட்டது.

✓ இது இந்தியாவின் கனமான ராக்கெட் எல்விஎம்-3க்கான ஆறாவது ஏவுகணையாகும். இதில் 2019ல் சந்திராயன்-2 ஏவப்பட்டது. இரண்டாவது ஏவுகணை குறைந்த புவி சுற்றுப்பாதையில் பல செயற்கைக் கோள்களை செலுத்தும் திறனை நிரூபித்தது.

- **ஜிம்னோதோராக்ஸ் தமிழ்நாடுயென்சிஸ் (Gymnothorax Tamilnaduensis)**

✓ இந்திய வேளாண் ஆராய்ச்சிக்கவுன்சிலைச் சேர்ந்த விஞ்ஞானிகள் குழு ஒன்று, தமிழகத்தின் கடலூர் கடற்கரையில் இருந்து ஒரு புதிய வகை மோரே ஈல் மீனைக் (Moray Eel fish) கண்டுபிடித்துள்ளனர்.

✓ இந்தப் புதிய இனத்திற்கு தமிழ்நாடு என்ற பெயரைப் பின்பற்றி, 'ஜிம்னோதோராக்ஸ் தமிழ்நாடுயென்சிஸ்' என்று பெயரிடப்பட்டுள்ளது. மேலும், 'தமிழ்நாடு பழுப்பு மோரே ஈல்'' என்ற பொதுப்பெயரும் இதற்கு வழங்கப்பட்டுள்ளது.

APPOLLO STUDY CENTRE

# விளையாட்டுகள்

- **ரோஹன் போபண்ணா**

✓ மார்ச் 18 அன்று, இந்திய டென்னிஸ் வீரர் ரோஹன் போபண்ணா – கலிபோர்னியாவின் இந்தியன் வெல்ஸில் 10,143,750 டாலர் பிஎன்பி பரிபாஸ் ஓபனில் ஆண்கள் இரட்டையர் பட்டத்தை வென்ற பிறகு, ஏடிபி மாஸ்டர்ஸ் 1000 சாம்பியன் ஆனார்.

✓ 43 வயதான போபண்ணா மற்றும் 35 வயதான எப்டன் ஜோடி இறுதிப் போட்டியில் 3 செட்களில் நெதர்லாந்தின் வெஸ்லி கூல்ஹோப் மற்றும் பிரிட்டனின் நீல் ஸ்குப்ஸ்கியை தோற்கடித்தது.

- **ஐபிஏ (IBA) மகளிர் குத்துச்சண்டை உலக சாம்பியன்ஷிப் 2023**

✓ இந்தியாவின் நிது கங்காஸ் - ஐபிஏ மகளிர் குத்துச்ச்ணடை உலக சாம்பியன்ஷிப் 2023இன் 48 கிலோ பிரிவில், இறுதிப் போட்டியில் மங்கோலியாவின் லுட்சைகான் அல்டன்செட்செக்கைத் தோற்கடித்து தங்கப் பதக்கம் வென்றார்.

✓ 81 கிலோ எடைப் பிரிவு இறுதிப் போட்டியில் 2018 ஆம் ஆண்டு உலக சாம்பியனான சீனாவின் வாங்லினாவைத் தோற்கடித்து நாட்டின் இரண்டாவது தங்கப் பதக்கத்தை வென்றார் சவீட்டி பூரா (Saweety Boora).

- **நிகாத் ஜரீன் (Nikhat Zareen)**

✓ மார்ச் 26 அன்று, புதுதில்லியில் உள்ள இந்திராகாந்தி விளையாட்டு வளாகத்தில் நடைபெற்ற ஐபிஏ மகளிர் உலக குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டியில் நடப்பு உலக சாம்பியனான நிகாத் ஜரீன் - 50 கிலோ பிரிவு இறுதிப் போட்டியில் இரண்டு முறை ஆசிய சாம்பியனான வியட்நாமின் குயென்தி டாமை (Nguyen Thi Tam) 5க்கு பூஜ்ஜியம் என்ற கணக்கில் தோற்கடித்தார்.

- **லோவ்லினா போர்கோஹைன் (Lovlina Borgohain)**

✓ 75 கிலோ எடைப்பிரிவு இறுதிப் போட்டியில் லோவ்லினா போர்கோஹைன் இரண்டு முறை காமன்வெல்த் போட்டியில் பதக்கம் வென்ற ஆஸ்திரேலியாவின் கெய்ட்லின் பார்க்கரை 5க்கு 2 என்ற கணக்கில் தோற்கடித்து தன்னுடைய முதல் உலகப் பட்டத்தை வென்றார்.

✓ நான்கு இறுதிப் போட்டிகளில் இருந்து நான்கு தங்கப் பதக்கங்களுடன், இந்தியா தனது சிறந்த செயல்திறனைக் காட்டி, பதக்கப்பட்டியலில் முதலிடத்தைப் பிடித்தது.

# அறிக்கைகள்

- **'இந்திய மாநிலங்களின் ஆற்றல் மாற்றம்'**
- ✓ கர்நாடகா மற்றும் குஜராத் - சுத்தமான மின்சார மாற்றத்தில் அதிகபட்ச முன்னேற்றம் அடைந்த நாட்டின் முதல் மாநிலங்களாக தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளன.
- ✓ இது இந்தியாவின் ஆற்றல் மாற்றம் குறித்த புதிய அறிக்கையை அடிப்படையாகக் கொண்டது. இதை எம்பர் (EMBER) உடன் இணைந்து எரிசக்தி பொருளாதாரம் மற்றும் நிதி பகுப்பாய்வு நிறுவனம் (Institute for Energy Economics and Financial Analysis) தயாரித்துள்ளது.
- ✓ 'இந்திய மாநிலங்களின் ஆற்றல் மாற்றம்' என்ற இந்த அறிக்கை – 16 மாநிலங்களை பகுப்பாய்வு செய்துள்ளது. அவை இந்தியாவின் வருடாந்திர மின் தேவையில் 90 விழுக்காடு ஆகும்.

- **நிலச்சரிவு அட்லஸ் அறிக்கை**
- ✓ உத்தரகாண்டில் உள்ள ருத்ரபிரயாக் மற்றும் தெஹ்ரி ஆகிய இரண்டு மலை மாவட்டங்கள் - 'நாட்டில் நிலச்சரிவு அபாயத்தை அதிகமபட்சமாக வெளிப்படுத்தும்' நாடு முழுவதிலும் உள்ள 147 மாவட்டங்களில் முறையே முதல் மற்றும் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளன.
- ✓ இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் தேசிய தொலை உணர்வு மையம் தயாரித்த 'நிலச்சரிவு அட்லஸ் அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.
- ✓ இந்தியாவின் நிலச்சரிவு அட்லஸ், 2013இல் நிகழ்ந்த கேதார்நாத் பேரழிவு மற்றும் 2011இல் சிக்கிம் பூகம்பத்தால் தூண்டப்பட்ட நிலச்சரிவுகள் போன்ற அனைத்து பருவகால மற்றும் நிகழ்வு அடிப்படையிலான நிலச்சரிவுகளையும் மேப் செய்வதற்கு இஸ்ரோவின் செயற்கைக் கோள் தரவுகளைப் பயன்படுத்தியது.

- **இந்தியாவில் எழுத்தறிவு விகிதம்**
- ✓ கல்வி அமைச்சகம் பகிர்ந்துள்ள தரவுகளின்படி, பீகார் 61.8 விழுக்காடு என்ற மிகக் குறைந்த அளவு கல்வியறிவையே கொண்டுள்ளது. அதற்கு அடுத்த இடங்களில் அருணாச்சலப் பிரதேசம் (65.3 விழுக்காடு) மற்றும் ராஜஸ்தான் (66.1 விழுக்காடு) கல்வியறிவு பெற்ற மாநிலங்களாக விளங்குகின்றன. இந்தியாவில் 94 விழுக்காடு கல்வியறிவு விகிதம் கொண்ட கேரளா முதலிடத்தில் உள்ளது. அதற்கு அடுத்த இடங்களை லட்சத்தீவு (91.85 விழுக்காடு) மற்றும் மிசோரம் (91.33 விழுக்காடு) கொண்டுள்ளன.
- ✓ கிராமப்புற இந்தியாவில் கல்வியறிவு விகிதம் 67.77 விழுக்காடாக உள்ளது. இது நகர்ப்புற இந்தியாவில் 84.11 விழுக்காடு ஆக உள்ளது.

- **2023ஆம் ஆண்டின் உலகின் சிறந்த இடங்கள்**
- ✓ டைம்ஸ் பத்திரிகையின் '2023ஆம் ஆண்டின் உலகின் சிறந்த இடங்கள்' பட்டியலில் இந்தியாவின் இரண்டு இடங்கள் இடம் பெற்றுள்ளன.
- ✓ டைம் (TIME) இதழ், 2023ஆம் ஆண்டிற்கான 'உலகின் மிகச் சிறந்த இடங்களின்' வருடாந்திர பட்டியலை வெளியிட்டுள்ளது.
- ✓ இந்தப் பட்டியலில் இந்தியாவின் இரண்டு இடங்கள் இடம்பெற்றுள்ளன.
- ✓ மயூர்பஞ்ச் மற்றும் லடாக் ஆகிய இரண்டு இடங்கள் முறையே அவற்றின் அரிய புலிகள் மற்றும் பழங்கால கோயில்கள், சாகசங்கள் மற்றும் உணவுகளுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

- **ஆத்மநிர்பர் பாரத் (Atmanirbhar Bharat)**

✓ உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதாரமாகிய இந்தியா, 2047க்குள் ஆற்றல் சுதந்திரத்தை அடைய வாய்ப்புள்ளது. பிரதமர் நரேந்திர மோடியின் ஆத்மநிர்பர் பாரத் எதிர்கால வளர்ச்சிக்கான நுழைவு வாயிலாக நிரூபிக்கப்படும்.

✓ அமெரிக்காவின் முன்னணி ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, சுத்தமான தொழில்நுட்பம் மூலம் மட்டுமே இது சாத்தியமாகும்.

✓ தற்போதைய சூழ்நிலையைப் பற்றி பேசுகையில், இந்தியா தனது எண்ணெய் மற்றும் நிலக்கரி தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, கிட்டத்தட்ட 80-85 விழுக்காடு இறக்குமதியையே நம்பியுள்ளது. இருப்பினும், சுத்தமான எரிசக்தி செலவில் குறிப்பிடத்தக்க சரிவானது, பேட்டரி சேமிப்பு, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் போன்றவற்றில் இந்தியாவின் மூதலீட்டை விரைவுபடுத்துவதற்கான சிறந்த வாய்ப்பாக விளங்குகின்றன.

APPOLO STUDY CENTRE

# தரவரிசைப்பட்டியல்கள்

- **கல்வி சுதந்திர குறியீட்டு அறிக்கை**
  - ✓ இந்தியாவின் கல்வி சுதந்திர குறியீடு– கல்வி சுதந்திர குறியீட்டு அறிக்கையின்படி, மொத்தம் உள்ள 179 நாடுகளில் 30 விழுக்காட்டிற்கும் கீழே உள்ளது.
  - ✓ இந்த குறிகாட்டிகளில் ஆராய்ச்சி மற்றும் கற்பிப்பதற்கான சுதந்திரம், கல்வி பரிமாற்றம் மற்றும் பரவல் சுதந்திரம், பல்கலைக் கழகங்களின் நிறுவன சுயாட்சி, வளாகத்தின் ஒருமைப்பாடு, மற்றும் கல்வி மற்றும் கலாச்சார வெளிப்பாட்டின் சுதந்திரம் ஆகியவை அடங்கும்.
  - ✓ இந்தியா, உடனடி அண்டை நாடுகளான நேபாளம் (0.86), பாகிஸ்தான் (0.45) மற்றும் பூட்டான் (0.46) ஆகிய நாடுகளுக்குப் பின்னாலும், வங்காளதேசம் (0.25) மற்றும் இராணுவ ஆட்சிக்கு முந்தைய மியான்மருக்கு (0.01) முன்னாலும் இருந்தது.

- **தேர்தல் ஜனநாயகக் குறியீடு 2023**
  - ✓ வி-டெம் ஜனநாயக அறிக்கை (V-dem Democracy report) 2023இன் தேர்தல் ஜனநாயகக் குறியீட்டில் இந்தியா 108வது இடத்தில் உள்ளது.
  - ✓ 2022ஆம் ஆண்டில், தேர்தல் ஜனநாயகக் குறியீட்டில் இந்தியாவின் தரவரிசை 100வது இடத்தில் இருந்தது. இந்த அறிக்கை கடந்த 10 ஆண்டுகளில் முதல் 10 தன்னாட்சி நாடுகளில் ஒன்றாக இந்தியாவை குறிப்பிட்டுள்ளது. தாராளவாத ஜனநாயகக் குறியீட்டில் இந்தியா 97வது இடத்தில் உள்ளது.
  - ✓ தாராளவாத ஜனநாயகக் குறியீட்டில் இந்தியா கீழ்பகுதியில் 50 விழுக்காட்டில் இடம் பிடித்துள்ளது. இந்த தாராளவாத ஜனநாயகக் குறியீட்டில் 0.89 மதிப்பெண்களுடன் டென்மார்க் முதல் இடத்தில் உள்ளது.

- **ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் (Stockholm International Peace Research Institute)**
  - ✓ மார்ச் 13 அன்று ஸ்டாக்ஹோமில் உள்ள பாதுகாப்பு சிந்தனைக் குழுவான ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்ட அறிக்கையின்படி, உலகின் முன்னணி ஆயுத இறக்குமதியாளராக இந்தியா உள்ளது.
  - ✓ 167 முக்கிய ஆயுத இறக்குமதியாளர்களில் இந்தியா, 11 விழுக்காடு பங்குடன் தனது முதலிடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.
  - ✓ ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிக்கையின்படி, 2018-22இல் உலகின் ஐந்து பெரிய ஆயுத இறக்குமதியாளர்கள் இந்தியா (11 விழுக்காடு), சவூதி அரேபியா (9.6 விழுக்காடு), கத்தார் (6.4 விழுக்காடு), ஆஸ்திரேலியா (4.7 விழுக்காடு) மற்றும் சீனா (4.7 விழுக்காடு) ஆகும்.

- **உலக காற்றுத் தரக்குறியீடு 2022**
  - ✓ ஸ்விட்சர்லாந்தைச் சேர்ந்த IQAir நிறுவனம், 2022ஆம் ஆண்டிற்கான உலகக் காற்றுத் தரக் குறியீட்டை வெளியிட்டது. அங்கு அது இந்தியாவை 8வது இடத்தில் வைத்துள்ளது. இதற்கு முன்பு அது ஐந்தாவது இடத்தில் இருந்தது.
  - ✓ உலகின் மிகவும் மாசுபட்ட நாடாக ஆப்பிரிக்க நாடான சாட் முதல் இடத்தைப் பிடித்துள்ளது.
  - ✓ உலகெங்கிலும் உள்ள சுற்றுச் சூழல் நிலைமைகள் குறைந்து வருவதால், இந்தியாவும் பாகிஸ்தானும் உலகிலேயே மிகவும் மாசுபட்ட நகரங்களைக் கொண்டு, மிகுந்த எச்சரிக்கையுடன் உள்ளன.

## ➢ உலகளாவிய பயங்கரவாதக் குறியீடு

- ✓ தாக்குதல்கள் மற்றும் இறப்புகள் முறையே 75 விழுக்காடு மற்றும் 58 விழுக்காடு குறைந்தபோதிலும், தொடர்ந்து நான்காவது ஆண்டாக பயங்கரவாதத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடாக ஆப்கானிஸ்தான் உள்ளது என்று பத்தாவது உலகளாவிய பயங்கரவாத குறியீட்டு அறிக்கை காட்டுகிறது.
- ✓ இந்தக் குறியீட்டில் இந்தியா 13வது இடத்தைப் பிடித்துள்ளது. இது முந்தைய ஆண்டைக் காட்டிலும் ஒரு சிறிய சரிவைக் குறிக்கிறது.
- ✓ இந்தக் குறியீட்டில் 25 மோசமான பாதிப்புக்குள்ளான நாடுகளில் ஒன்றாக இருந்தபோதிலும், இந்தியாவில் பதிலளித்தவர்கள் தங்கள் அன்றாட பாதுகாப்பிற்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக இருக்கும் போர் மற்றும் பயங்கரவாதத்தைத் தேர்ந்தெடுப்பதைத் தவிர்த்தனர்.

## ➢ ஹுருன் உலகளாவிய பணக்காரர்கள் பட்டியல்

- ✓ எம்3எம் ஹுருன் உலளாவிய பணக்காரர்கள் பட்டியல் சமீபத்தில் வெளியிடப்பட்டது. அதில் இந்திய தொழிலதிபர் முகேஷ் அம்பானி 2023ஆம் ஆண்டில் உலகின் முதல் 10 பணக்காரர்களில் 9வது இடத்தைப் பிடித்தார்.
- ✓ இந்தத் தகுதியைப் பெற்ற ஒரே இந்தியர் அவர் ஆவார். மேலும் உலகெங்கிலும் உள்ள பெரிய செல்வந்தர்களில் ஒருவராக அவர் சேர்க்கப்பட்டுள்ளார்.
- ✓ இந்தியாவில் மொத்தம் 187 பில்லியனர்கள் உள்ளனர். மேலும் 16 புதிய பணக்காரர்கள் இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். LVMH அழகு நிறுவனத்தில் உரிமையாளர் பொர்ணார்ட் அர்னால்ட் இந்தப் பட்டியலில் முதல் இடம் பெற்றுள்ளார்.

## ➢ உலகளாவிய கடவுச் சீட்டு குறியீடு 2023

- ✓ இயக்க மதிப்பீட்டில் (Mobility Score) மிகக் குறைந்த மதிப்பெண்ணைப் பெற்ற இந்தியா 144வது இடத்தில் உள்ளது.
- ✓ இந்தியா இயக்க மதிப்பீட்டில் பெரும் வீழ்ச்சியடைந்து 144வது இடத்தில் உள்ளது.
- ✓ மார்ச் 29 (புதன்கிழமை) அன்று கடவுச் சீட்டு குறியீடு, 2023ஆம் ஆண்டுக்கான கடவுச்சீட்டு பவர் ரேங்குகளை வெளியிட்டது.
- ✓ இந்தியாவின் இயக்க குறியீட்டின் சரிவு, உலக அளவில் மிகப்பெரிய பொருளாதார வீழ்ச்சியாக பார்க்கப்படுகிறது. இந்தியாவின் மதிப்பெண் 2022ஆம் ஆண்டில் 73 ஆக இருந்தது.
- ✓ இருப்பினும், மார்ச் 2023 நிலவரப்படி, இந்தியாவின் மதிப்பெண் 70 ஆக உள்ளது.
- ✓ இந்தியாவின் தரவரிசை இந்த ஆண்டு கணிசமாக 6 இடங்கள் குறைந்து, 2022இல் 138 வது இடத்திலிருந்து 2023இல் 144வது இடத்திற்கு வந்துள்ளது.

# முக்கிய தினங்கள்

| நாள் | தினம் | மையக் கருத்து |
|---|---|---|
| மார்ச் 01 | உலக கடற்பாசி தினம் | கடற்புல் மற்றும் கடல் சுற்றுச் சூழல் அமைப்பில் அதன் முக்கிய செயல்பாடுகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஆண்டுதோறும் மார்ச் 1ஆம் தேதி உலக கடற்பாசி தினம் அனுசரிக்கப்படுகிறது. |
| மார்ச் 01 | உலக குடிமக்கள் பாதுகாப்பு தினம் | இந்த ஆண்டிற்கான கருப்பொருள், 'எதிர்கால சந்ததியினரின் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பிற்காக உலகின் முன்னணி நிபுணர்களை ஒன்றிணைத்தல்' என்பதாகும். |
| மார்ச் 01 | பாகுபாடு இல்லாத தினம் | இந்த ஆண்டு பாகுபாடு இல்லாத தினத்தின் கருப்பொருள், 'உயிர்களைக் காப்பாற்றுங்கள், குற்றங்களை நீக்குங்கள்' என்பதாகும். |
| மார்ச் 03 | உலக வனவிலங்கு தினம் | இந்த ஆண்டு உலக வனவிலங்கு தினத்தின் கருப்பொருள், 'வனவிலங்கு பாதுகாப்புக்கான கூட்டு' என்பதாகும். |
| மார்ச் 03 | உலக செவித்திறன் தினம் | உலக சுகாதார நிறுவனம் 2023 உலக செவிப்புலன் தினத்திற்காக 'அனைவருக்கும் காது மற்றும் செவிப்புலன் பராமரிப்பு' என்ற கருப்பொருளைத் தேர்ந்தெடுத்தது. |
| மார்ச் 04 | தேசிய பாதுகாப்பு தினம் (National Security Day) | இந்திய தேசிய பாதுகாப்பு கவுன்சில் இந்த ஆண்டுக்கான கருப்பொருளாக, 'இளம் மனதை வளர்த்தல்- பாதுகாப்புக் கலாச்சாரத்தை வளர்த்தல்' என்று அறிவித்துள்ளது. |
| மார்ச் 04 | தேசிய பாதுகாப்பு தினம் (National Safety Day) | 2023ஆம் ஆண்டு தேசிய பாதுகாப்பு தினத்தின் கருப்பொருள், 'எங்கள் நோக்கம் - முற்றிலும் தீங்கு இல்லாமை' என்பதாகும். |
| மார்ச் 04 | உலக உடல் பருமன் தினம் | உலக உடல் பருமன் தினம் மார்ச் 4, 2023 அன்று 'மாறும் பார்வைகள்: உடல் பருமன் பற்றி பேசுவோம்' என்ற கருப்பொருளுடன் |

| | | |
|---|---|---|
| | | அனுசரிக்கப்படுகிறது. |
| **மார்ச் 05** | **நிராயுதபாணியாக்கம் மற்றும் பரவல் தடுப்பு விழிப்புணர்வுக்கான சர்வதேச தினம்** | நிராயுதபாணியாக்கும் முயற்சிகள், அமைதி மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும், ஆயுத மோதல்களைத் தடுப்பதற்கும், முடிவுக்குக் கொண்டு வருவதற்கும் எவ்வாறு பங்களிக்கின்றன என்பது பற்றிய மக்களின் புரிதல் |
| **மார்ச் 08** | **சர்வதேச மகளிர் தினம்** | மையக்கருத்து 2023- 'டிஜிட்டல்: பாலின சமத்துவத்திற்கான புதுமை மற்றும் தொழில்நுட்பம்' |
| **மார்ச் 09** | **சர்வதேச சிறுநீரக தினம்** | மையக்கருத்து 2023 – 'அனைவருக்கும் சிறுநீரக ஆரோக்கியம் - எதிர்பாராத நிலைமைக்கு தயார்படுத்துதல், பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவு அளித்தல்' |
| **மார்ச் 14** | **சர்வதேச கணித தினம்** | 'அனைவருக்கும் கணிதம்' என்பதே 2023ஆம் ஆண்டிற்கான மையக் கருத்து ஆகும். |
| **மார்ச் 14** | **நதிகளுக்கான சர்வதேச நடவடிக்கை தினம்** | நதிகளின் முக்கியத்துவம் மற்றும் பல்வேறு அச்சுறுத்தல்களில் இருந்து அவற்றைப் பாதுகாப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்நாள் அனுசரிக்கப்படுவதன் நோக்கமாகும். |
| **மார்ச் 15** | **உலக நுகர்வோர் உரிமைகள் தினம்** | 2023 மையக்கருத்து: 'சுத்தமான ஆற்றல் மாற்றங்கள் மூலம் நுகர்வோரை மேம்படுத்துதல்' |
| **மார்ச் 16** | **தேசிய தடுப்பூசி தினம்** | பூமியில் இருந்து போலியோவை முற்றிலும் ஒழிப்பதற்கான விழிப்புணர்வை அதிகரிப்பதற்காக இந்தியாவில் தேசிய தடுப்பூசி தினம் அனுசரிக்கப்படுகிறது. |
| **மார்ச் 17** | **உலக தூக்க தினம்** | உலக தூக்க சங்கம், இந்த ஆண்டு உறக்க தினத்திற்கான கருப்பொருளாக, 'உறக்கம் ஆரோக்கியத்திற்கு அவசியம்' என்பதை அறிவித்துள்ளது. |
| **மார்ச் 18** | **உலகளாவிய மறுசுழற்சி தினம்** | உலகளாவிய மறுசுழற்சி தினம் 2023இன் மையக்கருத்து, 'ஆக்கபூர்வமான கண்டுபிடிப்பு' என்பதாகும். |
| **மார்ச் 20** | **உலக சிட்டுக் குருவி தினம்** | 2023 மையக்கருத்து, 'நான் சிட்டுக்குருவிகளை நேசிக்கிறேன்' |
| **மார்ச் 20** | **சர்வதேச மகிழ்ச்சி தினம்** | 2023 மையக் கருத்து, 'நினைவில் வைத்துக்கொள்ளுங்கள், நன்றியுடன் |

| | | |
|---|---|---|
| | | இருங்கள், அன்பாக இருங்கள்' |
| **மார்ச் 20** | **உலக வாய் சுகாதார தினம்** | உலக வாய்வழி சுகாதார தினம் 2021, 2022 மற்றும் 2023 ஆகிய 3 தொடர் ஆண்டுகளுக்கான மையக் கருத்து, 'உங்கள் வாயால் பெருமைப்படுங்கள்' என்பதாகும். |
| **மார்ச் 21** | **உலக கவிதை தினம்** | உலகெங்கிலும் உள்ள மக்கள் தாங்கள் அனைவரும் அடையாளம் காணக்கூடிய மொழியின் வெளிப்பாட்டைக் கௌரவிப்பதற்காக உலக கவிதை தினத்தைக் கொண்டாடுகிறார்கள். |
| **மார்ச் 21** | **உலக டவுன் சிண்ட்ரோம் தினம்** | இந்த ஆண்டு உலக டவுன் சிண்ட்ரோம் தினத்தின் கருப்பொருள், 'எங்களுடன், எங்களுக்காக அல்ல' என்பதாகும். |
| **மார்ச் 21** | **சர்வதேச காடுகள் தினம்** | 2023ஆம் ஆண்டிற்கான சர்வதேச காடுகள் தினம் 'காடுகள் மற்றும் ஆரோக்கியம்' என்ற கருப்பொருளை ஏற்றுக் கொண்டுள்ளது. |
| **மார்ச் 22** | **உலக தண்ணீர் தினம்** | 2023 உலக தண்ணீர் தினத்தின் மையக்கருவானது, 'தண்ணீர் மற்றும் சுகாதார நெருக்கடியைத் தீர்க்க மாற்றத்தை விரைவுபடுத்துதல்' என்ற கருப்பொருளில் உள்ளது. |
| **மார்ச் 23** | **உலக வானிலை நாள்** | 2023ஆம் ஆண்டிற்கான கருப்பொருள், 'தலைமுறைகள் முழுவதும் வானிலை, காலநிலை மற்றும் நீரின் எதிர்காலம்' |
| **மார்ச் 23** | **ஷஹீத் திவாஸ் அல்லது தியாகிகள் தினம்** | பகத்சிங், சுக்தேவ் தாப்பர் மற்றும் சிவராம் ராஜ்குரு ஆகிய மூன்று இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்கள் 1931 ஆம் ஆண்டு தூக்கிலிடப்பட்ட நினைவு தினம் |
| **மார்ச் 24** | **உலக காசநோய் தினம்** | 2023ஆம் ஆண்டு உலக காசநோய் தினத்திற்கான மையக் கருத்து, 'ஆம். நாம் காசநோயை முடிவுக்குக் கொண்டு வரலாம்' என்பதாகும். |
| **மார்ச் 25** | **பிறக்காத குழந்தையின் சர்வதேச தினம்** | 2023இன் பிறக்காத குழந்தையின் சர்வதேச தினத்தின் கருப்பொருள், இன்னும் பிறக்காத குழந்தைகளின் கண்ணியம் மற்றும் மதிப்பு' என்பதாகும். |
| **மார்ச் 27** | **உலக நாடக தினம்** | 2023ஆம் ஆண்டு உலக நாடக |

| | | |
|---|---|---|
| | | தினத்தின் கருப்பொருள், நாடகமும் அமைதி கலாச்சாரமும்' என்பதாகும். |
| மார்ச் 30 | **சர்வதேச பூஜ்ஜிய கழிவுகள் தினம்** | சர்வதேச பூஜ்ஜிய கழிவுகள் தினம், நிலையான நுகர்வு மற்றும் உற்பத்தி நடைமுறைகளை ஊக்குவிக்கும். மேலும், 2030 நிலையான வளர்ச்சி நிகழ்ச்சி நிரலின் இலக்குகளை அடைவதற்கு பூஜ்ஜிய கழிவு முயற்சிகள் எந்த வழிகளில் உதவுகின்றன என்பது பற்றிய புரிதலை மேம்படுத்தும். |
| மார்ச் 31 | **சர்வதேச திருநங்கைகளின் பார்வைத் திறன் தினம்** | திருநங்கையர் பார்வை தினம் என்பது பாலின அடையாளங்கள் மற்றும் வெளிப்பாடுகளின் பன்முகத் தன்மையைக் கொண்டாடுவதற்கும், திருநங்கைகளின் சமூகத்தைப் புரிந்து கொள்வதற்கும் ஏற்றுக் கொள்வதற்கும் ஒரு முக்கியமான வாய்ப்பாக அமையும். |
| மார்ச் 31 | **சர்வதேச போதைப் பொருள் சோதனை தினம்** | போதைப் பொருள் மற்றும் அவற்றின் விளைவுகள் பற்றி மக்களுக்குக் கற்பிப்பதும், போதைப் பொருள் உபயோகத்துடன் தொடர்புடைய அபாயங்களைக் குறைப்பதற்கான தீங்கு குறைப்பு முயற்சிகளை ஊக்குவிப்பதும் இந்த நாளின் நோக்கமாகும். |
| மார்ச் 31 | **உலக காப்பு நாள்** | நம் வாழ்வில் தரவுகளின் பங்கு மற்றும் வழக்கமான காப்புப் பிரதிகளின் முக்கியத்துவத்தைப் பற்றி மக்கள் அறிந்து கொள்வதற்கான நாள் இதுவாகும். |

# CURRENT AFFAIRS - TNPSC ORIGINAL QUESTIONS & ANSWERS – EXAMS CONDUCTED IN JANUARY & FEBRUARY 2023

## CURRENT EVENTS

### Other & COVID

1. Which country becomes the fastest country in the world to administer 100 million doses of Covid-19 vaccine?
   **a. India** b. Bhutan c. Russia
   d. U.S.A e. Answer not known
   உலகில் எந்த நாடு முதன்முதலாக 100 மில்லியன் கோவிட்-19 தடுப்பூசி செலுத்தப்பட்டு இலக்கை அடைந்தது?
   a. இந்தியா b. பூடான் c. ரஷ்யா
   d. அமெரிக்கா e. விடை தெரியவில்லை

2. Yaas cyclone was formed in
   a. Arabian Sea **b. Bay of Bengal** c. Red Sea
   d. Dead Sea e. Answer not known
   யாஸ் சூறாவளி எங்கு உருவானது?
   a. அரபிக்கடல் **b. வங்காள விரிகுடா** c. செங்கடல்
   d. சாக்கடல் e. விடை தெரியவில்லை

### Science

3. Which of the following Mars space craft program are/is incorrectly paired.
   1. Tianwen -1- Planetary Exploration – China
   2. United Arab Emirates – Hope Orbiter
   3. NASA – Perseverance rover
   4. India- Technology demonstrator satellite
   a. 1 and 2 only b. 2 and 3 only **c. 4 only**
   d. 1,2 and 3 only e. Answer not known
   பின்வருவனவற்றில் எந்த செவ்வாய் விண்கல திட்டங்கள்/திட்டம் தவறாக இணைக்கப்பட்டுள்ளது?
   1. டியான்வென்-1- கோள்களின் ஆய்வு – சீனா
   2. ஐக்கிய அரபு அமீரகத்தின் விண்கலம் - நம்பிக்கை ஆர்பிட்டர்
   3. NASA– விடாமுயற்சி ரோவர்
   4. இந்தியா- தொழில் நுட்ப செயல்விளக்க செயற்கைக் கோள்

a. 1 மற்றும் 2 மட்டும் b. 2 மற்றும் 3 மட்டும் c. 4 மட்டும்
d. 1,2 மற்றும் 3 மட்டும் e. விடை தெரியவில்லை

4. Using a website to pour out one's grievances is called
**a. cyber venting** b. web hate c. web anger
d. cyber abuse e. Answer not known
ஒரு மனிதனின் வேதனைகளை வலைதளம் மூலம் கொட்டுவதின் முறைக்கு பெயர்
a. சைபர் வென்டிங் b. வெப் ஹேட் c. வெப் ஆங்கர்
d. சைபர் அபியூஸ் e. விடை தெரியவில்லை

## Books and authors

5. The autobiography 'The Race of my life' is related to
a. P.T. Usha **b. Milkha Singh** c. Kapil Dev
d. Mahendra Singh Dboni e. Answer not known
'தி ரேஸ் ஆ.ஃ.ப் மை லை.ஃ.ப்' என்ற சுயசரிதை யாருடன் தொர்புடையது?
a. பி.டி. உஷா b. மில்கா சிங் c. கபில் தேவ்
d. மஹேந்திர சிங் தோனி e. விடை தெரியவில்லை

## Awards and Honours

6. Maha Vir Chakra award on 26th January 2021 won by
a. Naik Digendra Kumar b. Major Vivek Gupta
c. Brigadier Sant Singh **d. Colonel B. Santosh Babu**
e. Answer not known
26 ஜனவரி 2021-ல் மகாவீர் சக்ரா விருது ______________ அவர்களுக்கு வழங்கப்பட்டது
a. நாயக் திகேந்திர குமார் b. மேஜர் விவேக் குப்தா
c. பிரேகிடியர் சாண்ட் சிங் d. கர்னல் B. சந்தோஷ் பாகு
e. விடை தெரியவில்லை

7. The Padma Vibushan in the field of Arts for the year 2021 was awarded to ______________ in Tamil Nadu.
a. Narayan Devnath b. K.S.Chitra
c. Bombay Jeyasree **d. S.P. Balasubrahmanyam**
e. Answer not known
கலைத்துறையில் சாதனைகள் செய்தமைக்காக, 2021 ஆம் ஆண்டிற்கான, தமிழ்நாட்டில் பத்ம விபூஷன் விருது பெற்றவர் யார்?

a. நாராயண் தேவ்நாத் b. கே.எஸ்.சித்ரா c. பாம்பே ஜெயஸ்ரீ
d. எஸ்.பி.பாலசுப்பிரமணியம் e. விடைதெரியவில்லை

## Welfare oriented Government schemes and their utility

8. Which one of the following employment schemes is the most momentous to strengthen the livelihood resource base of rural poor?
a. Atmanirbhar Bharat
**b. Mahatma Gandhi National Rural Employment Guarantee Act**
c. Pradhan Mantri Mudra Yojana
d. PLI Scheme (Production Linked Incentive)
e. Answer not known
கிராமப்புற ஏழைகளின் வாழ்வாதார ஆதாரங்களை வலுப்படுத்த எந்த வேலைவாய்ப்புத் திட்டம் மிகவும் முக்கியமானது?
a. ஆத்மநிர்பர் பாரத்
b. மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம்
c. பிரதம மந்திரியின் முத்ரா திட்டம்
d. உற்பத்தி வழி இணைந்த ஊக்கத் தொகைத் திட்டம்
e. விடை தெரியவில்லை

9. Which one of the following pair is not matched correctly?
a. SANKALP - Ministry of Skill Development
**b. STRIVE - Ministry of MSME**
c. SAMPADA - Ministry of Food processing
d. SAUBHAGYA - Ministry of Power
e. Answer not known
கீழே கொடுக்கப்பட்டவைகளுள் எவை சரியாகப் பொருத்தப்படவில்லை?
a. சங்கல்ப் - திறன் வளர்ப்பு அமைச்சகம்
b. ஸ்டிரைவ் - MSME அமைச்சகம்
c. சம்பதா - உணவு செயலாக்க அமைச்சகம்
d. சௌபாக்கியா - சக்திதிறன் அமைச்சகம்
e. விடை தெரியவில்லை